விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*


ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 22 வியாழக்கிழமை (05.05.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 137

## ஜெயந்தன் படையணியின் வீர சாதனைகள் போரியல் வரலாற்றிற்கு பெருமை சேர்ப்பன

### வாழ்த்துச் செய்தியில் தலைவர் வே.பிரபாகரன்



(கிளிநொச்சி)

ஒரு போரின் போக்கை நிர்ணயிப்பது தனியாக ஆயுதப்பலமோ அல்லது ஆட்பலமோ அல்ல. மிகவும் நுட்பமாக தீட்டப்படும் போர்முறைத் திட்டங்களும், அந்தத் திட்டங்களை சாதுரியமாக செம்மையாக செயற்படுத்துகின்ற படையணிகள்தான் போரின் தலைவிதியை தீர்மானிக்கின்றன. இந்தவகையில் ஜெயந்தன் படையணி தனிச்சிறப்பு வாய்ந்தது. இவ்வாறு தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

ஜெயந்தன் படையணியின் 12 ஆம் ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

இற்றைக்குப் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்னர், எமது போராட்ட வளர்ச்சிப் போக்கில் ஒரு முக்கிய வரலாற்றுத் திருப்பமாக இந்தப் படையணி பரிணமித்தது. இது எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு புதியபாதையைத் திறந்தது. மரபுவழிப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரசபை ஊழியர்கள் நேற்று வேலைநிறுத்தம்

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை சீரமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து மின்சாரசபை ஊழியர்கள் நேற்று 4 மணிநேர வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நண்பகல் 12 மணிமுதல் மாலை 4 மணிவரை அவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த 4 மணி நேரத்தில மின்வெட்டு இடம்பெற்றதனால் வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக தாங்கள் திருத்தங்களை மேற்கொள்ளவில்லையென மின்சாரசபை ஊழியர்கள் தெரிவித்தனர்.

தங்கள் எதிர்ப்பைப் பொருட்படுத்தா (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பு விரைவில் உருவாக்கப்படல் வேண்டும்

## நோர்வே அமைச்சர் விடார் ஹெல்கீசன் வலியுறுத்து



(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்த மீள் கட்டுமான புனரமைப்புக்கு, அரசாங்கத்திற்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே பொதுக்கட்டமைப்பு மிகவிரைவில் உருவாக்கப்படுவது அவசியமானதாகும்.

இவ்வாறு நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் வலியுறுத்தியுள்ளார். பி.பி.சியின் உலகசேவைக்கு நோர்வேப் பிரதி அமைச்சர் ஹெல்கீசன் நேற்று அளித்த செவ்வியிலேயே மேற்கண்டவாறு பொதுக்கட்டமைப்பின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மினிவான் - சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் ஸ்தலத்தில் பலி!

### சுன்னாகத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மினிவான் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்று மாலை சுன்னாகம் கந்தரோடை வீதியில் இடம்பெற்றுள்ளது.

சுன்னாகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த மினிவான் சைக்கிளில் சென்ற பிரஸ்தாப நபரை மோதியதில் அவர் ஸ்தலத்திலேயே பலியானார்.

இச்சம்பவத்தின்போது கல்லாரி மல்லாகத்தைச் சேர்ந்த ஐயம்பிள்ளை யோகநாதன் (வயது 46) என்ற குடும்பஸ்தரே பலியானவராவார்.

அவரது சடலம் மரணவிசார (12 ஆம் பக்கம் பார்க்க)

## முப்படைத் தளபதிகளும் நேற்று மட்டு. விஜயம்

(மட்டக்களப்பு)

## சிவராமின் படுகொலையை கண்டித்து தமிழ்க் கூட்டமைப்பினர் ஆர்ப்பாட்டம்

## எரிபொருட்களின் விலை நள்ளிரவுமுதல் அதிகரிப்பு

(கொழும்பு)

## நேற்று மட்டு. விஜயம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண பாதுகாப்பு நிலைமைகளை கண்காணிக்கும் நோக்கில் முப்படைத் தளபதிகளும் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டனர்.

முப்படைத் தலைமை அதிகாரியும், கடற்படைத் தளபதியுமான தயா சந்தகிரி, விமானப்படைத் தளபதி ஏயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா, இராணுவத் தளபதி சாந்தகொட்டேகொட ஆகியோரே மட்டக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பினர் ஆர்ப்பாட்டம்

## நாளை பாராளுமன்றில் விசேட விவாதம்

(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் மாமனிதர் தர்மரட்ணம் சிவராம் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுப் போராட்டமொன்றினை நடத்தினர்.

ஜெயவர்த்தனபுர சந்தியிலிருந்து பாராளுமன்ற வளாகம்வரை அவர்கள் எதிர்ப்பு ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

இதன்பின்னர் இவர்கள் பாராளுமன்றத்தின் மத்தியிலும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். கொலையாளிகளை இனங்காண பக்கசார்பற்ற விசாரணைகளை நடத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியினை கேட்டுள்ளனர்.

கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

நாடுமுழுவதும் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்குவரும் வகையில் பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

பெற்றோல் லீற்றர் ஒன்று 6 ரூபாவாலும், டீசல் லீற்றர் ஒன்று 4 ரூபாவாலும், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்று 3 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாதிக மெதகம தெரிவித்துள்ளார்.

இதுவரை பெற்றோலியப் பொருட்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தனங்கிளப்பில் வெடிவிபத்து

(தனங்கிளப்பு)

சாவகச்சேரி, தனங்கிளப்பிலுள்ள இராணுவத்தினரின் ஆட்லறித்தளத்தில் வெடிச்சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முற்பகல் 11.15 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரட்ணாயக்க தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தின்போது மூன்று இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர். சம்பவம் இராணுவ வீரர்களின் தவறால் இடம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தனது பதவியை தக்கவைத்துக்கொள்ளவே ஜனாதிபதிக்கு பொதுக்கட்டமைப்பு அவசியம்

### சீறுகின்றார் ஹெல உறுமய எம்.பி.

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பினை உருவாக்கினால் அரசாங்கத்திற்கு எவ்வித ஒத்துழைப்பினையும் வழங்கப் போவதில்லையென ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அதுருலிய ரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பாராளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஏற்கனவே பலகூறுகளாக பிளவுபட்டுள்ள பலமிழந்துள்ள விடுதலைப் புலிகளை பொதுக் கட்டமைப்பு மீண்டும் ஒன்றிணைத்துப் பலமாக்கிவிடும். விடுதலைப் புலிகளை பலம்பெறவைக்க ஜனாதிபதி முனைந்து வருகிறார்.

ஜனாதிபதியின் முட்டாள்தனத்தையும், தனது பதவியின் எதிர்காலம் கவிழ்ந்து போகாமல் தக்கவைக்கும் ஒரு முயற்சியாகவே நாம் இதனைக் கருதவேண்டியுள்ளது.

ஜனாதிபதியின் இச்செயலுக்கு ஒருபோதும் ஆதரவளிக்கக்கூடாதென அனைத்துக் கட்சிகளையும் அவர் கேட்டுள்ளார்.(ச-4)

EXPOAIR
your friend in the skies...
யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தொழிற்சங்கங்களைக் கலந்து ஆலோசித்து இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்

**வடக்கு- கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றம் 2004, 2005 தொடர்பாக உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அமைச்சுக்கு அனுப்பிய அறிக்கை இது.**

வடக்கு - கிழக்கு மாகாணசபையின் பொதுநிர்வாக உள்ளூராட்சி அமைச்சினால் 2004, 2005 ஆம் ஆண்டுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றம் ஓர் இடமாற்றத்திட்டமில்லாத இடமாற்றமாகும்.

2004 ஆம் ஆண்டுக்கான இடமாற்றசபைக்கு எமது சங்கத்திற்கு உரியகால அவகாசத்துடன் அறிவிக்காது அறிவித்த அறிவித்தல் இடமாற்றசபை கூடிய பின்னரே எமக்குக் கிடைக்கப்பெற்றது. இதனால் இடமாற்றசபையில் கலந்து கொள்ளமுடியவில்லை.

வருடாந்த இடமாற்றமானது வருடத்தின் ஆரம்பத்தில் (ஜனவரி 01 ஆம் திகதி முதல்) செயற்படுத்தப்படவேண்டியது. இந்த இடமாற்றம் 01.01.2004 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்துவதற்கென மேற்கொள்ளப்பட்டு அலுவலக நிர்வாக நடவடிக்கைகளைக் காரணம்காட்டி 01.04.2004 ஆம்திகதிவரை பிற்போடப்பட்டது. பின் பாராளுமன்றப் பொதுத தேர்தல் காரணமாக காலவரையறையில்லாது பிற்போடப்பட்டது.

பின் குறித்த இடமாற்றத்தை 01.06.2004 இலும் 01.07.2004 இலும் நடைமுறைப்படுத்துவதென அறிவிக்கப்பட்டு வடமாகாணத்தைப் பொறுத்தவரை 75 வீதமும் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரை 25 வீதமுமே நடைமுறைப்படுத்தப்பட்டது. ஏனைய மிகுதி இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதனால் இந்த இடமாற்றத்தை இரத்துச் செய்து 2005 இல் ஒழுங்கான முறையில் எமது சேவையினருக்குப் பாதிப்பு இல்லாதவகையில் செய்யுமாறு கோரப்பட்டது. இதற்கு எதுவித பதிலும் தரப்படவில்லை.

அரசியல் செல்வாக்கும், அதிகாரிகளின் செல்வாக்கும் அற்றவர்கள் இந்த இடமாற்றத்தில் சென்றவர்கள். ஏனையவர்களது இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தாது விட்டுள்ளார். மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி கமலா, சிவசிதம்பரம் 2004 ஆம் ஆண்டுக்கான இடமாற்றத்தில் ஓர் நிலையத்தில் அல்லாது பல உள்ளூராட்சி மன்றங்களில் சேவைக்காலத்தை ஒருங்கிணைந்து 5 வருடத்திற்கு மேற்பட்டவர்கள் எனின் அவர்கள் யாவரையும் இடமாற்றத்திற்குட்படுத்துவதென மேற் கொள்ளப்பட்டும் பலரை இந்த இடமாற்றத்திற்கு உள்ளடக்கப்படவில்லை. இதற்கு சீரியான விபரம் இல்லாது செய்யப்பட்டதே காரணமாகும். இவ்வாறு தவறவிட்டோர் பட்டியல் எம்மால் சமர்ப்பிக்கமுடியும்.

2004 ஆம் ஆண்டு இடமாற்றம் தொடர்பாக எம்மால் கௌரவ ஆளுநர் அவர்களுக்கு எழுதப்பட்ட பல கடிதங்கள் ஆளுநர் செயலகத்தால் பொதுநிர்வாக உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பியும் எதுவித பதிலும் எமக்குக்கிடைக்கவில்லை. ஆனால் 2005 ஆம் ஆண்டு இடமாற்றத்தில் உள்ளூராட்சி ஆணையாளரை திணைக்களத்திற்கு இடையேயான இடமாற்றத்தைச் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டுக்கான இடமாற்றத்தை பிரதம செயலாளரது ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்த முயன்றும் இற்றைவரை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்ட இடமாற்ற சபைக்கு எமக்கு அறிவிக்கப்படவில்லை.

நாட்டில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் மத்திய அரச பொதுநிர்வாக அமைச்சு இடமாற்றங்கள் யாவும் 01.03.2005 வரை பிற்போடுவதாக அறிவித்தல் ஊடகங்கள் மூலமாக வெளியாகியிருந்தது. இது விடயத்தை மாகாணசபை நிர்வாகத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது அது மத்திய அரச இடமாற்றம், எனவும் மாகாணசபை இடமாற்றம் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்ட பகுதிக்கு இடமாற்றப்பட்டவர்கள் தவிர்ந்த ஏனையோர் 01.01.2005 முதல் இடமாற்றத்தில் செல்ல வேண்டும் எனவும தெரிவித்தனர்.

அத்துடன், ஊடகங்கள் மூலமும் அறிவித்தல் வெளியாகியது. சில அலுவலகங்களுக்குத் தொலைநகல் மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டது. சில திணைக்களங்கள் சிலரை விடுவித்தும் அதிகாரிகளின் அனுசரணையுடையவர்கள் இற்றைவரை தானும் விடுவிக்கப்படவில்லை.

2004 ஆம் ஆண்டு இடமாற்றத்தில் இடமாற்றம் செய்யப்பட்டு இடமாற்றம் பிற்போடப்பட்ட சிலரது இடமாற்றமும் எதுவித அறிவித்தலும் கிடைக்காத சிலரது இடமாற்றமும் 2005 முதல் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவித்தும் இற்றைவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இவர்களின் பட்டியலை எம்மால் வெளியிடமுடியும். 2004 ஆம் ஆண்டு இடமாற்றத்தில் இடமாற்றத்திற்கு உட்படுத்தப்பட வேண்டியவர்கள் என இடமாற்றப்பட்டவர்கள் சில திணைக்கள அதிகாரிகளின் வேண்டுதலில் இரத்துச் செய்யப்பட்டவர்கள் 2005 ஆம் ஆண்டு இடமாற்றத்தில் உள்ளடக்கப்படவில்லை. இவர்களின் பட்டியலும் உள்ளது.

இடமாற்றப்பட்டவர்கள் இடமாற்றத்தில் செல்லாதுவிட்டால் சம்பளம் நிறுத்தப்படும் என அறிவித்தலில் குறிப்பிடப்பட்டது. இது ஓர் ஒழுங்கான நிர்வாக அறிவித்தல் அலல. திணைக்களத் தலைவர்கள இடமாற்றப்பட்டவர்களை உரிய திகதியில் விடுவித்தல் அவர்களது கடமையாகும். அதற்குப் பதில் இடமாற்றம் வழங்கப்படாவிடின் அதற்கு உரியபதிலீடு வழங்கவேண் டியது. இடமாற்றத்தை மேற்கொண்ட அமைச்சுத் திணைக்களத்தின் கடமையாகும. 2004, 2005 இடமாற்றங்களினால் உத்தியோகத்தர்களின் பயனுறுதி வாய்ந்த சேவை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பொரும்பாலான அலுவலக வேலைகள் குழப்பமடைந்த நிலையிலும் காணப்படுகின்றது.

மாகாணசபை அமைப்பு முறைக்கு முன்னர் இடமாற்றம் செய்யும் போது இடமாற்றும் திட்டம் வகுக்கப்பட்டு வர்த்தமானி மூலமும் சுற்றறிக்கைகள் மூலமும் ஊழியர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுவந்துள்ளது. இப்படியான அறிவித்தல்களின் பிரதிகள் எம்மால் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி அனுப்பப்பட்டுள்ளது.

இடமாற்றப்படுபவர்களின் பாதிப்பு அவர்கள் சார்ந்துள்ள தொழிற்சங்கங்கள் மூலமே முன்கொண்டுவர முடியும் ஏனவே, இடமாற்றம் தொழிற்சங்கங்களைக் கலந்து ஆலோசித்து மேற்கொள்ளப்படவேண்டும் எமது சேவைக காலத்தில் இப்படிப்பட்ட இடமாற்றதனை நாம்காணவில்லை. இது ஓர் மனித உரிமை மீறலான நடவடிக்கையாகும்

எதிர்காலத்தில் மேற்கொள்ளப் படவுள்ள இடமாற்றம் தொடர்பாக உரிய இடமாற்றுத் திட்டத்தை வகுத்து அதற்கு அமைய செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை தற்போது மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக பதவியேற்றிருக்கும் ஏ.கே. பத்மநாதன் மேற்கொள்வார் என எதிர்பார்க்கின்றோம். ஏ.கே.பத்மநாதன் சில வருடங்களுக்கு முன் இதே அமைச்சின் செயலாளராக கடமையாற்றியபோது இதுபோன்ற பாதிப்பான இடமாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-19)

## இராசிபலன்

**05.05.2005**
**(சித்திரை 22 , வியாழக்கிழமை)**
**துவாதசி பிற்பகல் 04.45 மணிவரை**
**உத்தரட்டாதி முன்னிரவு 07.24 மணிவரை**
**இராகுகாலம் 01.26 - 02.56 மணிவரை**
**சுபநேரம் 07.26-08.56 மணிவரை**
**பிரதோச விரதம்.**

| | |
|---|---|
| மேடம் | சோம்பல்நிலை, பிறருக்கு உதவுதல், காரியதாமதம், உஷ்ணவியாதி. |
| இடபம் | தனதானிய சேர்க்கை, குடும்ப சுகம், தொழில் வருமானம், முயற்சி பலிதம். |
| மிதுனம் | பிரபுத்தனம், நன்கொடை, தொழில் முன்னேற்றம், புதிய சிந்தை. |
| கடகம் | அபகீர்த்தி, புதிய திட்டமிடல், வேலைச் சுமை, குடும்பக்கவலை. |
| சிம்மம் | சரீரபீடை, பொருள் விரயம், வாகனபயம், வாக்கு மேன்மை. |
| கன்னி | மனோதைரியம், களஸ்திர நன்மை, செய் தொழில் விருத்தி, நல்ல வருமானம். |
| துலாம் | நண்பர்கள் உதவி, தனலாபம், சுபநிகழ்வு, முயற்சி கைகூடும். |
| விருச்சிகம் | தாழ்ந்த சுபாவம், எடுத்தகாரியம் தாமதமாகும், பணத்தட்டுப்பாடு, திடீர்நன்மை. |
| தனுசு | ரோக பயம், முயற்சி தாமதம், கல்வியில் ஆர்வம், தனவிரயம். |
| மகரம் | இனிய சம்பவம், உறவினர் வருகை, விருந்துபசாரம், தொழில் நன்மை. |
| கும்பம் | வீண் விவாதம், காரிய தாமதம், செய் தொழில் நன்மை, பணவிரயம். |
| மீனம் | கற்பனை மிகுதி, சயன சுகம், வெகுமானம், செல்வாக்கு. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

-வளவன்

## யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரியர்களுக்கான வதிவிடச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை ஆங்கிலம், விசேட கல்வி, அழகியற் கல்வி, ஆரம்பக் கல்வி ஆகிய துறைகளில் ஆசிரியர்களுக்கான 5 நாள் வதிவிடச் செயலமர்வு நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வுகளில் பங்குபற்ற விரும்பும் நிரந்தர நியமனம் பெற்ற ஆசிரியர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை தத்தமது வலயக்கல்விப் பணிப்பாளருடாக பீடாதிபதிக்கு எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவத்தின் மாதிரியை வலயக் கல்விப் பணிமனையிலும், கல்வியியற் கல்லூரியிலும் பார்வையிடலாம் என பீடாதிபதி அறிவித்துள்ளார். (ற)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு, யாழ். மாவட்ட மாணவர் அமைப்பு பாடசாலைகளுக்கிடையில் பல்வேறு போட்டிகளை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

குறிப்பாக ஆண்களுக்கான உதைபந்தாட்டம், மரதன் ஓட்டம், பெண்களுக்கான வலைப்பந்தாட்டம், ஆண், பெண் இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டம், அணி நடைப்போட்டி, சைக்கிள் ஓட்டப்போட்டி என்பனவற்றை நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இபபோட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் அணிகளுக்கும், போட்டியாளர்களுக்கும் சான்றிதழ்களும், பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் தமது விண்ணப்பங்களை யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புச் செயலகத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைத்து போட்டியில் பங்குபற்றுவதனை உறுதிப் படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற-7)

## சைக்கிளோட்டப் போட்டி

(பொன்னாலை)

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கைதடி மத்தி விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி இன்று நடைபெறுகிறது.

இப்போட்டி யாழ்.மாவட்ட ரீதியில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (க-7-49)

## மஹோற்சவம்

(சுன்னாகம்)

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த மாதம் 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

இன்று சப்பறத் திருவிழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு தேர்த் திருவிழாவும் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (க-7)

## சிறுவர்களுக்கு புனர் வாழ்வளிக்க கல்முனையில் நால்வர் குருகுலம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு வாழ்வளிப்பதற்கான அமைப்பொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கல்முனையில் நால்வர் குருகுலம் என்ற பெயரில் சிறுவர் வாழ்வகம் ஒன்று கலாசார உதவிப் பணிப்பாளர் பரதன் கந்தசாமியினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 25 சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு அவர்களுக்கு கல்வி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இவ்வாழ்வகத்திற்கான மாடிக் கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுப்பதற்கு லண்டன் சைவ முன்னேற்ற சங்கத்தின் ஸ்தாபகர் இரா. இராமநாதன முன்வந்து அதற்கான அடிக்கல்லையும் அண்மையில் நாட்டி வைத்தார்.

அம்பாறை மாவட்டத்தில் ஏற்கனவே யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக தம்பிலுவிலில் இயங்கி வந்த திருநாவுக்கரசு நாயனார் குருகுலக் கட்டடம் முழுமையாக சேதமடைந்துள்ளது.

இப்போது அக் கட்டடத்தை புனரமைப்புச் செய்வதற்கு பொது அமைப்புக்கள் நடவடிக்கை எடுத்துள்ளன. (க-7-5)

## விவாத அரங்கு - 8

**விடயம்**

**நம்மவர்கள் வெளிநாடு சென்றதனால்**

**எமது கலாசாரம்:**

- **சீரழிந்துள்ளது.**
- **சீர்பெற்றுள்ளது.**

**நடுவர்: சிரேஷ்ட சட்டத்தரணி திரு.சி.சிவநேசன்**

**உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.**

அனுப்பவேண்டிய முகவரி :
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# நிவாரணமாகக் கிடைத்த உடுதுணி, குடிநீர் விரைவில் துறைமுகத்திலிருந்து அகற்றப்படும்

பல தொண் நிவாரணப் பொருட்கள் தற்பொது கொழும்பு துறைமுகத்தில் தேக்கமடைந்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

• இதன்படி உடுதுணிகள், போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் என்பன விரைவில் விநியோகத்திற்காக துறைமுகத்திலிருந்து அகற்றப்படுமென சமூக சேவைகள் அமைச்சின் பேச்சாளர் விஜயகோன் தெரிவித்தார்.

புதிய வரிகள் தீர்வைகள் போன்றன இவ் இறக்குமதிக்காக கடந்த வாரம் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டன. தற்போது உதவிகள் அனைத்திற்கும் சாதாரண வரியே அறவிடப்படுகின்றன. விநியோகிக்கும் பணி தம்மிடம் தரப்பட்டால் அத்தியாவசிய பொருட்கள், துறைமுக வரியென்பவற்றை நாம் பொறுப்பேற்கலாம் என அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

ஆனால், பல சந்தர்ப்பங்களில் நாம் சுங்கத்திற்கும், துறைமுகத்திற்கும் செலுத்தவேண்டிய தொகை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்குப் பெறுதியாக இருப்பதில்லை. இவை பழைய துணிவகைகளாகவும் காலாவதியாகிய குடிநீர் போத்தல்களாகவும் உள்ளன எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவுஸ்திரேலிய தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த கிறிஸ் என்பவர் அவுஸ்திரேலிய பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில்,

நான் உலகம் முழுவதும் உதவிகள் அடங்கிய கொள்கலன்களை அனுப்பும் பணியை நீண்ட காலமாகச் செய்துவருகிறேன். மக்களின் வாழ்க்கையில் இவை ஏற்படுத்தும் வித்தியாசங்களை நான் பார்த்துள்ளேன். நாட்டிற்கு கொடுக்கப்பட்ட உதவிகள் அடங்கிய கொள்கலன்கள் இன்னும் இறக்கப்படாதுள்ளமை கண்டிக்கத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

இவர் அவுஸ்திரேலியாவில் இருந்து துணிமணிகள், சமையல் உபகரணங்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் அடங்கிய 20கொள்கலனகளை இலங்கைக்கு அனுப்பியிருந்தார். ஆனால் 17 கொள்கலன்கள் இறக்குமதி செய்ததன் பின் மேலதிக வரி செலுத்துமாறு தாம் கோரப்பட்டதாகத் தெரிவித்தார்.

இதேபோன்று சிட்னியிலுள்ள் வேறொரு அமைப்பைச் சேர்ந்த ஜோர்வ் ஹம்பின் அவுஸ்திரேலிய பத்திரிகைக்கு தெரிவிக்கையில்,

தாம் ஏற்கனவே மேலதிக வரியாக 2ஆயிரம் டொலர்களை செலுத்தியுள்ளதாகவும் இன்னும் 10 ஆயிரம் டொலர்கள் செலுத்தப்படவுள்ளதாகவும் இது பாரிய அவமானம் என்றும் குறிப்பிட்டிருந்தார். (ற-6)

## மருத்துவமனையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

சுமார் முப்பத்தைந்து வருடகால சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சார்ந்தவரும், நீண்டகால அரசியல் வாதியும், சமூக சேவையாளரும் கலை, இலக்கிய நாடக வல்லுனரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மானிப்பாய் தொகுதியின் பிரதம அமைப்பாளரும் அகில இலங்கை சமாதான நீதவானுமாகிய சின்னையா சிவஞானம் (சுகிதர்) கடும் சுகயீனம் காரணமாக ராஜகிரிய அரச மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ற)

# இடைநிறுத்தப்பட்ட அதிபர்கள் மீண்டும் சேவைக்கு திரும்புவார்கள்

(கொழும்பு)

கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலுமுள்ள பாடசாலைகள் சிலவற்றில் இடைநிறுத்தப்பட்ட அதிபர்களை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு பொதுச் சேவைகள் ஆணைக்குழு கல்வி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளது.

முதலாம் ஆண்டு அனுமதியின போது முறைகேடுகள் இடம்பெற்றதாகக் கூறப்பட்டு கொழும்பில் பிரபல பாடசாலையின் அதிபர்கள் கல்வி அமைச்சினால் பணிகளிலிருந்து இடைநிறுத்தப்பட்டார்கள்.

இந்த நிலையில் இவ்வாறு இடைநிறுத்தப்பட்டவர்களை மீண்டும் பணிகளில் சேர்த்துக்கொண்டு அவர்களுக்கு எதிரான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொதுச் சேவைகள் ஆணைக்குழு கல்வி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு ஆனந்தாக கல்லூரி கடந்த திங்கட் கிழமை மூடப்பட்டது.

அங்குள்ள அதிபர் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டு புதிய அதிபர் நியமிக்கப்பட்டமையை யடுத்து பிரச்சினைகள் ஏற்பட்டன. இதன் காரணமாக அந்தக் கல்லூரியை கால வரையறையன்றி மூடிவிடுவதென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (க-5)

# வழக்கு விசாரணைகளில் ஏற்படும் தாமதங்களை நீக்க விசேடகுழு!

## விரைவில் நியமிக்கப்படும் என்கிறார் நீதியமைச்சர்

(கொழும்பு)

வழக்கு விசாரணைகளில் ஏற்படும் தாமதங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு விசேட குழு ஒன்றை நியமிக்கவுள்ளதாக நீதியமைச்சர் ஜோன் செனவிரட்ண நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

குற்றவியல் வழக்கு திருத்த சட்டமூலம் மற்றும் குற்றவியல் வழக்கு விசேட ஒழுங்குமுறை திருத்த சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவிததார்.

சபாநாயகர் டபிள்யு ஜே.எம். லொக்குபண்டார தலைமையில் நேற்று முன்தினம் பாராளுமன்றம் கூடியபோது ஆணைக்குழுவின் அறிக்கை கிடைத்ததும் அதன் சிபார்சுகளுக்கேற்ப நீதித்துறையில் நிலவும் குறைபாடுகளைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் தெரிவித்தார்.

சிவில மேன்முறையீடு வழக்குகள தொடர்பாக புறம்பான நீதிமன்றங்களை நிறுவ உத்தேசித்துள்ளதாகவும் சந்தேக நபர் ஒருவரை தடுத்து வைப்பதற்கு பொலிஸாருக்கு வழங்கப்பட்ட கால அவகாசத்தை 24 மணித்தியாலத்திலிருந்து 48 மணித்தியாலமாக அதிகரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

விசாரணைகளை மேற்கொள்வதற்கு 24 மணித்தியாலங்கள் போதாதென்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டதையடுத்து இந்த கால எல்லை நீடிக்கப்பட்டது.

இதேவேளை வெளிநாடுகளில் சிறைத்தண்டனை விதிக்கப்படும் இலங்கையர்களுக்கு அந்தத் தண்டனையை இலங்கையில் நிறைவேற்றுவது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட நாடுகளுடன் இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவைதவிர இதுவரை 12 இலட்சம் இலங்கையர்கள் வெளிநாடுகளில் தொழில் துறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த எண்ணிக்கை எதிர்வரும் 2 வருடங்களில் 20 இலட்சமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கபடு கிறது. ஐம்பதாயிரம் பேருக்கு கொரியாவில் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-7-5)

## தடகளப் போட்டிகள்

(பொன்னாலை)

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகள் எதிர் வரும் சனி, ஞாயிறு தினங்களில் கொடிகாமம் அ.த.க. பாடசாலையில இடம்பெறவுள்ளன. (க-7-49)

# விழுப்புண் அடைந்த பெண் போராளிகளுக்கான நினைவில்லம் தேசியத் தலைவரால் திறப்பு

(கிளிநொச்சி)

கடந்தகாலப் போர்களின் போது விழுப்புண் அடைந்த பெண் போராளிகளுக்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டாம் லெப்டினன் மயூரி நினைவில்லத்தினை தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் நேற்று முன்தினம் திறந்து வைத்துள்ளார்.

இவ்விழாவின் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை தமிழீழத் தேசியத் தலைவர் ஏற்றிவைத்தா. அதனைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக்கொடியை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இரண்டாம் லெப்டினன் மயூரியின் திருவுருவப் படத்திற்கு மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் ஈகைச்சுடர் ஏற்றிவைக்க, மாவீரர் மயூரியின் சகோதரர் மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து இவ் நினைவில்லத்தை அன்பளிப்பாக நிர்மாணித்துத் தந்த கிளிநொச்சியைச் சேர்ந்த சியாமளாவின் தந்தை அமரர் கந்தசாமியின் நினைவுக் கல்வெட்டினை அன்னாரின் மகன் வரதன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மயூரி நினைவில்லத்தின் கட்டடத்தை தமிழீழத் தேசியத் தலைவர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.



விழுப்புண் அடைந்த போராளி செல்வி பாடினி தலைமையில் நிகழ்ந்த இந்நிகழ்வில் தளபதிகள், பொறுப்பாளர்கள், வைத்தியர்கள், ஆசிரியர்கள் மற்றும் விழுப்புண் அடைந்த போராளிகள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியாக நன்றியுரையினை மயூரி நினைவில்லப் போராளி வேணி நிகழ்த்தினார். (க)

## நூல்கள் அன்பளிப்பு

(பொன்னாலை)

ஊர்காவற்றுறை பிரதேச சபையில் அனலைதீவு உப அலுவலகப் பொது நூலகத்துக்கு அதன் வாசகர் வட்ட உறுப்பினர்களால் சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி நூல்கள் மற்றும் ஒலி, ஒளி நாடாக்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் நூலகத்தின் வளர்ச்சியை கருத்திற்கொண்டு உள்ளூராட்சிப் பிரமுகர்கள் மற்றும் அனலை தீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த புலம் பெயர்ந்தவர்களால் வழங்கப்பட்ட நிதியுதவி மூலமும் ஒரு தொகுதி நூல்கள் வாசகர் வட்டத்தால் கொள்வனவு செய்யப்படடு நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7-49)

# நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று

(சாவகச்சேரி)

வீதியில் சென்று கொண்டிருந்த பெண்ணிடம் தங்கச் சங்கிலியை அபகரிக்க மோட்டார் சைக்கிள் இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி நிறைவேறாமல் போய் விட்டது.

இச்சம்பவம் கடந்த மாதம் 30ஆம் திகதி சாவகச்சேரி மருதடி வடக்கு வீதியில் நடைபெற்றுள்ளது.

சம்பவத்தினத்தன்று பூநகரியைச் சேர்ந்த கோகுலவதனி என்னும் ஆசிரியை தன்னுடன் வந்த சக ஆசிரியைகள் இருவரை மீசாலை பழைய ஸ்ரேசன் பஸ் தரிப்பிடத்தில் பஸ்ஸில் ஏற்றி வழியனுப்பி விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை டச்சு வீதியில் அவரைப் பினதொடர்ந்து தலைக்கவசம் அணிந்த மோட்டார் சைக்கிள் இளைஞர்கள் இருவர் அவரது கழுத்திலிருந்த சங்கிலியை அறுக்கமுயன்றனர். அவர்களால் அறக்கப்பட்ட சங்கிலி நிலத்தில் விழுந்ததால் மோட்டார் சைக்கிள் திருடர்களின் நோக்கம் நிறைவேற வில்லை. (க-7-21)

# மேல்பேணில் நடந்த தமிழிசை விழா!



(சிட்னி)

இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக உண்ணாவிரதமிருந்து தியாக மரண மடைந்த அன்னை பூபதியின் நினைவாக அவுஸ்திரேலியா மெல்பேண் நகரில் தமிழிசை விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் அன்னை பூபதியின திருவுருவப் படத்திற்கும், தமிழ் மண்ணையும், தமிழ் மக்களையும், தமிழ்த் தேசியத்தினையும் நேசித்ததனால் மரணத்தைத் தழுவிக் கொண்ட மாமனிதர் சிவராம் அவர்களின் திருவுருவப் படத்திற்கும் மலரஞ்சலி செலுத்தி விழா ஆரம்பமானது.

இந்நிகழ்வில் மெல்பேணில் உள்ள முன்னணி சங்கீத ஆசிரியர்கள் திருமதி ரமா சிவராஜா, திருமதி நர்மதா ரவிச்சந்திரா மற்றும் திருமதி சிறீகாந்தி சற்குணம் ஆகியோரின் மாணவர்கள் வழங்கிய தமிழ் பாடல்களுடன் பிரபல இந்திய பாடகர் ஓ.எஸ்.அருண் அவர்களின் தமிழிசைப் பாடல்களும் இடம்பெற்றன. ஓ.எஸ். அருணின் ஆழிப்பேரலை பற்றிப் பாடிய பாடல் அனைவரையும் மெய் சிலிர்க்க வைத்தது.

சிறப்புரைகளை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் ஆற்றினர். (ற)

## கைதி மரணம்

(தங்காலை)

கைதுசெய்யப்பட்டு 24மணி நேரத்திற்குள் கைதி ஒருவர் மரணமான சம்பவம் ஒன்று தங்காலையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஆழிப்பேரலையின் போது மாத்தறை சிறைச்சாலையில் இருந்து தப்பிச் சென்ற பிரசன்ன என்பவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், அவர் சுகவீனமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

# சுற்றறிக்கை வெளியீடு

(சாவகச்சேரி)

வடக்கு-கிழக்கு மாகாண அரச திணைக்களங்களில் கடமையாற்றும் பொது எழுதுநர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை, சுருக்கெழுத்தாளர் சேவை, கணக்குப் பதிவாளர் சேவை, களஞ்சியக் காப்பாளர் சேவை என்பனவற்றை அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு உள்ளீர்க்கும் சுற்றறிக்கை (இல. 1/2005) வடக்கு-கிழக்கு மாகாண பொதுநிர்வாக அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ளது.

இச்சுற்றறிக்கையின்படி வடக்கு -கிழக்கு மாகாணங்களில் குறிப்பிடப்பட்ட சேவைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் உள்ளீர்க்கப்படுவதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூலை மாதம் 7ஆம் திகதிக்கு முன்பதாக வடக்கு-கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு திணைக்களத் தலைவருடாக அனுப்பி வைகக வேண்டுமெனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் உள்ளீர்ப்புச் செய்வதற்கு விருப்பம் தெரிவிக்காத உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றுச் செல்வதற்கும் சுற்றறிக்கையில் இடமளிக்கப்பட்டுள்ளது. (க-7,47)

## இன்று ஒரு தகவல்

# புரியாத புதிர்கள்

ஒருவர் வந்தார். "சார் தலையைப் பிய்த்துக் கொள்வது போல் ஏதாவது தகவல் இருந்தால் கூறுங்கள் " என்றார்."இப்போது தினமும் அப்படித் தானே சார் நடந்து கொண்டிருக்கிறது" என்றேன். "இருந்தாலும் அது போதாது சார்! இன்னமும் கடுமையாக வர வேண்டும்" என்றார். அவர் மிகவும் அறிவுபூர்வமான ஒரு ஆளாகத் தெரிந்தார். சரி.... இவரை இன்று முடிந்த அளவுக்குக் குழப்பிப் பார்க்கலாம் என்று நினைத்தேன்.

அவரைப் பார்த்தே ஒரு கேள்வி கேட்டேன் "சார் நான் சொல்வதெல்லாம் பொய்" என்று ஒருவன் சொல்கிறான். "அது உண்மையா பொய்யா?" என்று கேட்டேன். அவர் கொஞ்சம் யோசிக்க ஆரம்பித்தார். "அது தான் நான் சொல்வது பொய் என்று அவனே சொல்கிறானே சார்... அவ்வாறு இருக்கையில் என்ன சந்தேகம் அது பொய் தானே" என்றார்.

"சரி... அவன் சொல்வது பொய் என்று சொல்கிறீர்கள்" அவன் என்ன சொல்கிறான். "நான் சொல்வது பொய்" என்கிறான். அப்படியென்றால் "அவன் பொய் என்று சொல்வது பொய். அப்போது அது உண்மை என்று தானே ஆகும்..." என்று ஆரம்பித்தேன். அவர் லேசாக தலையை சொறிய ஆரம்பித்தார். சரி கச்சேரி களை கட்ட ஆரம்பித்து விட்டது என்பதைப் புரிந்துகொண்டேன்.

இன்னொரு கதை சொல்கிறேன் கேளுங்கள் என்று ஆரம்பித்தேன். ஒரு புத்திசாலியான பெரியவர் ஏதோ தவறு செய்துவிட்டார். விசாரணை நடந்தது. எல்லாம் முடிந்ததும் இறுதியாக நீதிபதி அவரைப் பார்த்துச் சொன்னார் "உங்கள் கடைசி விருப்பத்தைச் சொல்லலாம். ஆனால் ஒரு விஷயம் நீங்கள் உண்மையைச் சொன்னால் உங்களைத் தூக்கில் போடுவோம். பொய் சொன்னால் உங்களின் தலை வெட்டப்படும்" என்றார் நீதிபதி.

அந்த புத்திசாலியான பெரியவர் உடனே "அப்படியென்றால் என் தலை வெட்டுப்படட்டும்"என்றார். இதைக் கேட்டதும் தண்டனையைத் தள்ளி வைத்துவிட்டார்கள் ஏன் தெரியுமா? அவர் தலையை வெட்டிவிட்டால் அவர் செய்த குற்றம் உண்மை என்று ஆகும். அது உண்மை என்று ஆனால் அவரைத் தூக்கில் போட்டிருக்க வேண்டும். சரி அவரைத் தூக்கில் போடலாம் என்றால் அப்போது அவர் சொல்வது பொய் என்று ஆகும. அதனால் அவர் தலை வெட்டப்பட்டிருக்க வேண்டும.

இபபோது அவரை என்ன செய்வது? என்று என் எதிரில் உட்கார்நதிருந்தவரைக் கேட்டேன். இப்போது அவர் உண்மையாகவே குழம்ப ஆரம்பித்திருந்தார். ஒரு மாதிரியாக என்னைப் பார்த்தார். இதற்கு நான் என்ன செய்ய முடியும்? அவர்தானே இதுபோன்ற தகவலைக் கேட்டார்.

இப்போது நான் சொன்ன உதாரணங்கள் ஏற்படுத்தும் குழப்பம் இருக்கிறதே அதற்குப் பெயர் தான் **Paradox** அதாவது முரண் உரை அல்லது புரியாத புதிர். அறிவியல் துறையிலும் இதுபோன்ற சிக்கல்கள் ஏற்படுவது உண்டாம். சமீபத்தில் ஒரு கட்டுரை படித்தேன். அதில் இதைப்பற்றி நிறையச் சொல்லியிருந்தார்கள். அதெல்லாம் ஒரு புறமிருக்கட்டும் இப்போது எதிரில் உட்கார்ந்திருக்கும் நண்பருக்கு திருப்தியளிப்பது போல் ஒரு கதை சொல்வோம்.

ஒரு ஆள் ஒரு பெரிய கடைக்குள் நுழைந்தார். அது ஒரு டிபார்ட் மென்ட் ஸ்டோர். அவர் எதையோ யாருக்கும் தெரியாமல் எடுத்துவிட்டார் போலிருக்கிறது அவரைக் கூப்பிட்டுத் தனியாக விசாரித்தார் அந்தக் கடைக்காரர். அந்த ஆள் அவரைப் பார்த்து "அது சரி! கடைக்காரரே! நான் உங்கள் கடைக்குள் நுழைந்ததை நீங்கள் பார்த்தீர்களா?" என்றார். "ஆமாம்! பார்த்தேன்" என்றார் அவர். "சரி! இதற்கு முன்பு என்னை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என்றார். "இல்லை" என்றார் கடைக்காரர். "அப்படியென்றால் கடைக்குள் நுழைந்தது நான் தான் என்று எப்படி உங்களுக்குத் தெரியும்?" என்றார் அந்த ஆள். கடைக்காரர் தலையைப் பிய்த்துக்கொண்டார்.

இந்தக் கதையைக் கூறி விட்டு எதிரில் இருந்த நண்பரைப் பார்த்தேன். ஆரம்பத்தில் தலையைப் பிய்த்துக் கொள்வது போன்ற தகவல்தானே கேட்டார். இப்போது அவா சட்டையையும் சேர்த்துப் பிய்த்துக் கொண்டு தெருவில் இறங்கிச் சென்றார். அனேகமாக இனி இந்தப் பக்கமே வரமாட்டார் என்று நினைக்கிறேன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ரூ.3740 மில்லியன் வரை நட்டம் ஏற்படும் நிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

(கொழும்பு)

எண்ணெய் விலை தொடர்பான விசேட பேச்சுவார்த்தை ஒனறு நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இப் பேச்சுவார்த்தையின் போது எண்ணெய் விலை அதிகரிக்கும பட்சத்தில் அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்தும் அவ்வாறு எரிபொருளின் விலை அதிகரிக்கும் பட்சத்தில் பொதுப் போக்குவரத்துக் கட்டமைப்புக்கு எரிபொருள் மானியத்தை வழங்குவது குறித்தும் ஆராயப்பட்டன.

அமைச்சர்கள்,போக்குவரத்துச் சபையுடன் தொடர்புடைய பிரதிநிதிகள்,பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவா் உட்பட பலரும் இப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் ஜாலிய மெதகமே,

எரிபொருட்களின் விலையை மீண்டும் அதிகரிப்பது அவசியமானது. உலக சந்தையில் எரிபொருட்களின் விலை அதிகரிப்புக்கு ஏற்ப இலங்கையில் கடந்த 6 மாதங்களாக எரிபொருளின் விலையில் மாற்றங்கள் செய்யப்படவில்லை.

உலக சந்தையில் தற்போதைய விலை நிர்ணயத்தின் படி பெற்றோல் ஒரு லீற்றர் 79.54 சதத்திற்கு விற்பனை செய்ய வேண்டியிருந்தீ போதிலும், 70 ரூபாவிற்கே விற்பனை செய்யப்படுகின்றது. இவ்வாறே ஏனைய எரிபொருட்களின் நிலைமையும்.

அரசு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் என்பனவற்றின் எண்ணெய் விலைக்கான திருத்தம் இறுதித் திருத்தமாக்கப்பட்டது.

செப்ரெம்பர் 25ஆம் திகதியிலிருந்து இன்று வரை 6 மாதகாலம் கடந்துள்ளது. எனினும் உலக சந்தையில எண்ணெயின் விலை மிகவும் உயர்ந்து காணப்படுகின்றது என்பது எமக்குத் தெரியும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசு மீது நாம் குற்றம் சுமததவில்லை. தற்போது இந்த வருடத்தில் மட்டும் 3740 மில்லியன் ரூபா வரை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு நட்டம் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

கொள்வனவு செய்யும் விலைக்கும் ,விற்பனை செய்யும் விலைக்குமிடையே பாரிய வேறுபாடு ஏற்பட்டுள்ளதனால் இது தொடர்பாக நாம் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளோம்.

அரசாங்கம் இந்த நிலைமையை முன்னெடுத்துச் செல்வதில் உளள சிக்கல் நிலை காரணமாக கவனம் செலுத்தி வருகின்றது.

அரசாங்கம் சிலவேளைகளில் ஏதாவது ஒரு தொகையில் விலையைத் திருத்துவதற்கு தீமானிக்க இடம் உண்டு. விலை நிர்ணயம் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதென இந்த வேளையில் கூறமுடியும் என்றார். (ற-8)

# மக்களால் உருவாக்கப்பட்ட அரசை எதிர்த்து நிற்பவர்கள் கோழைகளே!

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக் குடியமர்த்துவது மற்றும் பாதிப்புற்ற பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவது என்பது சுலபமான விடயம் அல்ல.

ஐக்கிய தேசியக் கட்சி இதனை விளங்கிக்கொள்ளாமல் அரசின் மீது வீண்பழிகளை சுமத்தி மக்களை திசை திருப்ப முயற்சிக்கின்றது. அத்துடன், அரசியல் இலாபம் தேடுவதற்காக இந்தச் சந்தர்ப்பத்தை அக் கட்சி நன்கு பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. காலியில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், சுனாமி அனர்த்தத்தினால் 80 ஆயிரத்திற்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன. இவற்றை நாம் உடனடியாகக் கட்டிக் கொடுக்க முடியாது. அது சுலபமான காரியமல்ல.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு சென்றவர்களுக்கும் அதனுடைய இழப்புக்கள் பற்றி மதிப்பீடு செய்தவர்களுக்கும் தான் அது பற்றித் தெரியும்.

ஆனால் இதனையே இன்று அரசியல் பூச்சாண்டியாக ஐக்கிய தேசியக் கட்சியினர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். 100 மீற்றர் திட்டத்தை தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் இவர்கள் 100 மீற்றர் திட்டத்தில் தோற்றுப் போய்விட்டார்கள் என்பதை ஒத்துக்கொண்டுள்ளார்கள். ஜனாதிபதி தார்மீகப் பொறுப்புடன் எடுத்த முடிவை வெளிநாடுகளே இன்று போற்றியிருக்கின்றன.

தொழில்நுட்பத்தையும் இயற்கை வளத்தையும் அழித்து எமது எதிர்காலத்தை சிதைப்பதற்காக சுனாமி அனர்த்தம் எதிர்பாராத வகையில் வந்தது.

இது இயற்கையின் அனர்த்தம் என்பதைக் கூட இன்னும் எதிர்க்கட்சிகள் உணர்ந்துகொள்ளவில்லை. உணர்ந்து கொண்டாலும் அவர்கள் உணர்ச்சி இல்லாதவர்களாக இருக்கின்றார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

எணணெய விலையின் அதிகரிப்புப் பற்றியும் பொருள்களின் சந்தை விலையின் ஏற்றம் பற்றியும் இன்று அவர்கள் வெவ்வேறு விதங்களிலே தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள். எது எவ்வாறாயினும் எமது அரசு 41ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கியுள்ளது.

அன்று பட்டதாரிகளை துரத்தி அடித்து உதாசீனப்படுத்தியவர்களுக்கு எமது அரசு இன்று 41 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்தமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது ஒருபுறமிருக்க எதிர்க்கட்சியினர் அரசுடன் மக்கள் இணைந்து செயலபடுவதைத் தடுத்து மக்களால் உருவாக்கப்பட்ட அரசை எதிர்த்து நிற்கின்றார்கள். இவர்களின இத்தகைய செயலபாடு கோழைத்தனமானது என்றார். (க-5)

# கவனயீனமாக வாகனங்களைச் செலுத்தும் தனியார் பஸ் சாரதிகளை கைது செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

திருகோணமலை,கொழும்பு பிரதான வீதியில் கவனயீனமாக வாகனங்களைச் செலுத்தும் தனியார் பஸ் சாரதிகளை கைதுசெய்யும் விசேட நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தம்புள்ள முதல் அம்பேபுஸ்ஸ வரையிலான பகுதியில் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து ஒரு வார காலத்திற்கு மேற்கொள்ளவுள்ளதாக மக்கள் பாதுகாப்புச்சட்டம் மற்றும் சமாதானத்திற்கான பிரதியமைச்சர் ஜெயரட்ண ஹேரத் தெரிவித்தார்.

தம்புள்ள கொழும்பு வீதியில் கூடுதலான விபத்துக்கள் இடம்பெறுவதாகக் குறிப்பிட்ட பிரதியமைச்சர், கவனயீனமாக வாகனம் செலுத்துதல், அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றிச்செல்லல், போதையில் வாகனம் செலுத்துதல் போன்ற குற்றங்கள் தொடர்பாக சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையில் 50 பேர் கொண்ட குழு ஒன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது. முதற் கட்டத்தின் பெறுபேறுகளைக் கவனத்தில் கொண்டு திட்டத்தை தொடர்ந்தும் மேறகொள்வது குறித்து முடிவு செய்யப்படும் என்று பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (ற-5)

# மின்சாரசபை, பெ.கூ.தாபனம் மறுசீரமைக்கப்பட வேண்டும்

## மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

ஏனைய அரச நிறுவனங்களை மறுசீரமைக்க முன்னர் இலங்கை மின்சாரசபையையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தையும் மறுசீரமைக்க வேண்டுமென இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட பிரிவினர் மறுசீரமைப்பு விடயங்கள் குறித்து புரிந்துகொள்ள வேண்டும். பிரச்சினைகளை பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டுமென கடந்த 29ஆம் திகதி வெளியிடப்பட்ட மத்திய வங்கியின் 2004ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை மின்சாரசபையானது நாட்டின் எதிர்கால மின்சார தேவையை ஈடுசெய்யக் கூடிய வகையில் அதன் ஆற்றலை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இல்லையேல் நிரந்தர மின்வெட்டை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுவதுடன், எதிர்பார்க்கப்படும் வளர்ச்சி வேகமும் தடைப்படும்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் வங்கிக் கடன்களைக் குறைக்கவேண்டும் எனவும் மத்திய வங்கியின் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

# புற்றுநோய் பரம்பரை வியாதியல்ல குணப்படுத்தக் கூடியதே

## புற்று நோயியல் நிபுணர் நடராஜா ஜெயக்குமார் செவ்வி

2

**கேள்வி :-** அண்மையில் வடபகுதியில் இடம்பெற்ற யுத்தங்களால் அதன் போது பயன்படுத்தப்பட்ட குண்டுகளின் நஞ்சுத் தாக்கங்களால் புற்றுநோய் ஏற்படக் கூடிய வாய்ப்பு உள்ளதா?

**பதில் :-** பொதுவாக புற்றுநோய் ஏற்படுவதற்கு இரசாயனத் தாக்கங்களும்

*நுளம்புத்திரிப் பாவனையும் புற்றுநோய் ஏற்படக் காரணம் என ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது*

அணுக்கதிர் தாக்கங்களும் அதிகம் காரணமாகக் காணப்படுகின்றன. இவை ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன.

ஆனால் வடபகுதியில் இடம்பெற்ற யுத்தங்களின் போது பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டுப்பாவனைகள், ஷெல் வீச்சுகள் என்பவற்றால் புற்றுநோய் வருமா வராதா என்பது பற்றி ஆய்வுரீதியாக உறுதிப்படுத்தப்படாவிட்டாலும் புற்றுநோயை ஊக்குவிக்கும் ஒரு காரணியாகவே இது காணப்படுகிறது.

**கேள்வி :-** புற்றுநோய் தாக்க அடிப்படையில் யாழ்.மாவட்டம் எத்தனையாவது இடத்தில் உள்ளது?

**பதில் :-** யாழ்ப்பாணத்தில் இதுவரை காலமும் புற்றுநோய் வைத்தியசாலை இன்மையால் யாழ்.குடாநாட்டில் ஏற்

*உச்சம்பெற்ற புற்றுநோயாளர்களை வைத்துப் பராமரிப்பதற்கு ஒரு நிலையத்தை ஏற்படுத்த கலாநிதி ஆறு திருமுருகன் இணுவிலில் தனது வீட்டையும் காணியையும் அன்பளிப்பாக அளித்துள்ளார் இம்முயற்சிக்கு கேன் (Cane) என்ற நிறுவனமும் உதவி வழங்க முன்வந்துள்ளது.*

பட்ட புற்றுநோய் தாக்கம்பற்றி சரியான புள்ளி விபரங்கள் ஏதும் பெறப்படவில்லை. இதனால் இது குறித்து புள்ளி விபரங்களை மீளமைப்பு செய்யப்பட வேண்டிய தேவை உண்டு.

**கேள்வி :-**மகரகம வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் செல்லும் வடக்கு-கிழக்கு தமிழர்களை அங்குள்ளோர் இனப்பாகுபாடு அடிப்படையில் கவனிப்பதாக குற்றச்சாட்டு எழுகிறதே அது பற்றி கூறமுடியுமா?

மகரகம மருத்துவ மனையில் கடமையாற்றிய என் அனுபவத்தின் அடிப்படையில் இனத்துவசம் என்பது அங்கு கடமையாற்றும் வைத்தியர்களிடையே காணப் படாவிட்டாலும் இனவேறுபாட்டு உணர்பு அங்கு பணியாற்றும் தாதியர்கள், சிற்றூழியர்களிடையே அதிகம் காணப்படுவதை அவதானித்துள்ளேன்.

சிலவேளைகளில் தென்னிலங்கையில் குண்டுவெடிப்புகள் கலவரங்கள் என்பன ஏற்படும் போதும் சிங்களவர்களுக்கு இழப்புகள் ஏற்படும் போதும் இதன் தாக்கத்தையும் தமிழ் நோயாளர்களுக்கு ஏற் படும் பாதிப்புகளையும் நேரில் கண்டுள்ளேன்.

**கேள்வி :-**புற்றுநோயால் பாதிக்கப்படுவோர் தமக்கு ஏற்பட்டுள்ள நோயை இனம் கண்டு சிகிச்சைக்கு வராமைக்குக் காரணம் என்ன?

**பதில் :-** புற்றுநோய் ஏற்படும் போது உடலில் எந்தவித வலியும் தோன்றுவதில்லை இதனால் தாக்கத்துக்குள்ளாகுபவர் தனக்கு புற்றுநோய் ஏற்பட்டிருப்பது குறித்து அறிவதில்லை.

தமது உடலில் வலி ஏற்பட்டபிறகே இந்த நோயின் தாக்கம் பற்றி அறிந்து சிகிச்சைக்காக வருகிறார்கள்.

**கேள்வி :-** அல்சர் நோய்க்கும் புற்றுநோய்க்கும் இடையில் ஏதாவது.தொடர்புண்டா? அல்லது அல்சர் நோய்க்கு வைத்தியம் செய்யும் போது புற்றுநோய் ஏற்படும் சாத்தியம் உண்டா?

**பதில் :-** குடல் புற்றுநோய் ஏற்படும் போது அல்சர் போன்ற குடல் அழற்சியுடன்தான் ஏற்படும் எனினும் இந்தக் குடல் அழற்சிக்கு அல்சர் நோய்க்குரிய சிகிச்சை செய்தாலும் அந்நோய் கட்டுப்படப் போவதில்லை.

சிலவேளைகளில் அல்சர் நோய்க்கென வழங்கப்படும் மருந்துகளை குடற்புற்றுநோயால் ஏற்படக்கூடியண குடல் அழற்சி மற்றும் தாக்கங்களுக்கு வழங்கும் போது அத்தாக்கங்கள் குறைவடைந்தாலும் புற்றுநோயானது தொடர்ந்தம் வளர்ந்து செல்லும்.

ஆனால் அல்சரின் முற்றிய நிலையே புற்றுநோய் என கருதுவது முற்றிலும் தவறானது.

ஆனால் சிலர் புற்றுநோயால் ஏற்படும் குடல் அழற்ச்சிகளை அல்சர் எனக் கருதிக் கொண்டு அல்சருக்கு சிகிச்சை பெறும் போதுதான் இந்தக் குழப்பநிலை தோன்றுகிறது. ஒரு போதும் அல்சர் புற்றுநோயாக மாறுவதில்லை.

எனவே, அல்சருக்குரிய அறிகுறிகளை உணர்பவர்கள் தாமாகவே ஒரு முடிவுக்கு வந்து அல்சர் மருந்துகளைப் பாவிப்பதனைத்தவிர்த்து உரிய மருத்துவ சோதனைகள் மூலம் தமக்கு என்ன நோய் என்பதை வைத்திய சோதனைகள் மூலம் உறுதிப்படுத்திய பின்னரே மருந்துகளைப் பாவிக்கவேண்டும் இதுவே சிறந்த வழி.

**கேள்வி :-**புற்றுநோய்க்கான அறிகுறிகள் என்ன?

**பதில் :-** உடலில் ஆறாத காயங்கள், தடையங்கள் தழும்புகள், கட்டிகள் தொடர்ந்து இருமல், இரத்தப்

*புற்றுநோயைக் கர்ம வியாதி என்று கருதுவது முற்றிலும் தவறானது. மனித கலன்களின் அசாதாரண வளர்ச்சியே புற்றுநோய்த் தாக்கமாகும்*

போக்கு, மலம்கழித்தலில் உள்ள வித்தியாசங்கள், தோல்மாறுதல், சலம் அசாதாரணநிலையில் வெளியெறுதல், உடல் மெலிவு, மாதவிடாயின் இரத்தப் போக்கு, பசிஇன்மை, இடைவிடாத காய்ச்சல் போன்ற உடலில் மாற்றங்கள் இதன் அறிகுறியாகும்.

இதைவிட HIV நோயின் தாக்கமும் புற்றுநோயை ஏற்படுத்தும் ஆயினும் அது எமதுபகுதிகளில் மிகக்குறைவாக உள்ளது. ஏனெனில் பரம்பரை அலகுகளூடாக இது கடத்தப்படக்கூடியது.

**கேள்வி :-** புற்றுநோய் தாக்கத்துக்குள்ளானவர்கள் சமூகத்தில் ஒதுக்கப்படுகிறார்களே?

**பதில்:-** புற்றுநோயைக் கர்மவியாதி என கருதுவது முற்றிலும் தவறானது. மனித கலன்களின் அசாதாரண வளர்ச்சியே புற்றுநோய் ஆகும். எனவே இதை கர்ம நோய் எனவோ தொற்றுநோய் எனவோ கருதுவது தவறு அவர்களை ஒதுக்கி வைக்காமல் அவர்களுக்கு உதவுவது அவசியம்.

மார்புப்புற்றுநோய் இரத்தப் புற்றுநோய் போன்ற சில புற்றுநோய்கள் பரம்பரை அலகுகளூடாக பரவினாலும் புற்றுநோயாளர்களுடன் பழகுவதனாலோ அல்லது உணவுப் பரிமாற்றங்களாலோ பரவுவதில்லை.

எனவே புற்றுநோயாளர்களை சமூகத் தில் இருந்து ஒதுக்கக் கூடாது; அவர்களை மனிதநேயத்துடன் மதிப்பது அவசியம்.

**கேள்வி :-**யாழ்.போதனாவைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புற்றுநோய் வைத்திய பிரிவின் செயற்பட்டிற்கு பொது மக்களின் ஆதரவு எவ்வாறு இருக்கிறது?

**பதில் :-** யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புற்றுநோய் சிகிச்சைப்பிரிவை வளர்ச்சியடையச் செய்வதற்கு பொதுமக்களின் பங்களிப்பு மிகவும் அவசியம்.

புற்றுநோய் சிகிச்சை பிரிவை வளர்ச்சியில் பொது மக்களையும் ஈடுபடுத்துவதற்காக புற்றுநோய் நிதியம் எனும் ஒரு அமைப்பை உருவாக்க தீர்மானித்துள்ளோம். இதன் வங்கிக் கணக்கிலக்கங்களை வெளியிட்டு வகிப்பவர்கள் பணத்தை வைப்பிலிடுவதன் மூலமாக புலம்பெயர் உளவுகளும் புற்றுநோயாளர்களுக்கு உதவுவழியாக ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

இதைவிட கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தனது

*உத்தேச புற்றுநோய் நிதியத்துக்கு கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தனது சொந்த நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாவும், கலாநிதி ஆறு திருமுருகன் ஒரு இலட்சம் ரூபாவும், அன்பர் ஒருவர் ஒன்றரை இலட்சம் ரூபாவும் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.*

சொந்தநிதியிலிருந்து 1 இலட்சம் ரூபாவும் கலாநிதி ஆறுதிருமுருகன் 1 இலட்சம் ரூபாவும் வேறு ஒரு அன்பர் 1 1/2 இலட்சம் ரூபாவையும் வழங்கியுள்ளனர்.

தெல்லிப்பழை மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையில் புற்றுநோய்ச் சிகிச்சைகள் நடைபெறும் நேர அட்டவணை

### அட்டவணை

| யாழ்ப்பாணம் | தெல்லிப்பழை |
|---|---|
| செவ்வாய் காலை 8.00 - நண்பகல் 12.00 | திங்கள் காலை 8.00 - நண்பகல் 12.00 |
| வியாழன் காலை 8.00 - நண்பகல் 12.00 | புதன் காலை 8.00 - நண்பகல் 12.00 |
| சனி காலை 8.00 - நண்பகல் 12.00 | வெள்ளி காலை 8.00 - நண்பகல் 12.00 |

# தாதியர் பயிற்சிக்குச் சமுகமளிக்காதோரை உடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தாதியர் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டும் இதுவரை பயிற்சிப் பாடசாலைக்குச் சமூகமளிக்காத 16 பேரை உடனடியாகத் தாதியர் பயிற்சிப் பாடசாலையுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இவர்களுக்கான பயிற்சிகள் கடந்த ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தாதியர் பயிற்சிப் பாடசாலையுடன் தொடர்பு கொள்ள வேண்டப்படுவோர் பெயர் விபரம் வருமாறு:-

செல்வி தர்மினி நவரட்ணம் - இல.161/1, கல்பொத்த வீதி, கொழும்பு.

செல்வி என்.சிவரூபி கரம்பைக்குறிச்சி மேற்கு வரணி.

செல்வி எஸ்.சிந்துஜா - ஸ்கல்லேன், வியாபாரி மூலை, பருத்தித்துறை.

செல்வி எஸ்.மலைமகள் - நீலியம்பனை, மல்லாகம்.

செல்வி சுவர்ணா தியாகராஜா - தனிப்பனையடி, அச்செழு, நீர்வேலி.

செல்வி என்.தியாகநிதி - இல.84, கல்லூரிவீதி, நீராவியடி.

செல்வி ஏ.எம்.மனோரஞ்சினி - வட்டுக்கிழக்கு, சித்தங்கேணி.

செலவி எஸ்.கோகிலா - அல்வாய் கிழக்கு, அல்வாய்.

செல்வி ரி.சசிலேகா - சுழிபுரம் மேற்கு.

செலவி மரில்டா ஜோசப் - கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை.

செல்வி ரி.தட்சாயினி - இல. 14, அரசாங்க விடுதி, வவுனியா.

செல்வி யு.மேனகாதேவி - இல. 70, பொது மண்டப வீதி, வவுனியா,

செல்வி கே.ஜசிந்தா- புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

செல்வி எஸ்.அகிலஜா - மாந்தை கிழக்கு, மன்னார்.

செல் வி பி.தர்சினி - பண்டாரிக்குளம், வவுனியா.

செல்வி சி.பி.ஜெ.எம்.நிலானி - முருங்கன், மன்னார். (ந)

# வீடமைப்பு செயற்றிட்டங்களுக்காக செயலகத்தில் செயலணி உருவாக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்காக யாழ்மாவட்ட செயலகத்தில் வீடமைப்பு செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இச் செயலணியில் திட்ட இணைப்பாளராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவசுவாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், இவ் வீடமைப்புச் செயலணிக்குத் தேவையான பொறியியலாளர், நிதி மற்றும் தகவல் தொழில் நுட்ப அலுவலர்கள் நகர அமைப்பு சம்பந்தமாக திட்ட அலுவலர், புனரமைப்பு சம்பந்தமான திட்ட அலுவலர்கள் ஆகியோரை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்கான நடவடிக்கைகள். யாழ். மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ந-19)

# வீடமைப்புக் குறித்து ஆராயும் உபகுழுக் கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடுகளை அமைப்பது தொடர்பாக ஆராயும் உபகுழுக்கூட்டம் இன்று பி.ப.3.00 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் உபகுழுக்கூட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் பிரதேச செயலர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களது பிரதிநிதிகள், கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட வீடமைப்புடன் தொடர்புடைய திணைக்கள அதிகாரிகள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் உபகுழுக் கூட்டத்தில் நிரந்தர வீடுகளை அமைப்பது தொடர்பாகவும், நிரந்தர வீடுகளை அமைப்பதற்குத் தேவையான நிலங்களை சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்கள், கிராம சேவையாளர் ஊடாக இனங்கண்டு நில அளவை சேவைத் திணைக்களத்தினரால் அளவு செய்து நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு முன்வந்துள்ள நிறுவனங்களுக்கு இடங்களை ஒதுக்கிக் கொடுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளன. (ந-19)

# 26.12.2004

# ஆழிப்பேர் அடுக்கு அலைகளின் அகோரத் தாண்டவம்

(நேற்றைய தொடர்ச்சி...)

### பட்டகாலிலேபடும்

அடுக்கு அலைகளாக சீறிவருவது கடல் நீர் மட்டுமல்ல, அதன்பின் அலைகள்போல் வரும் நோய் நொடிகளும் தான். காற்றிலும் நீரிலும உள்ள கிருமிகள் பேரழிவை ஏற்படுத்தும் சக்தி உள்ளன. நோய்களை ஏறபடுத்தும் உயிர் வகைகள் உணவு செரிமான அடிக்குழாய்க்குள்ளும், இரத்தம் ஓடும் வழிகளுள்ளும், மூச்சுச் செல்லும் வழிகளுள்ளும் மாசுகள் உறைந்த நீர் வழியாக நுளம்பாலும் மனித உடற்தொடர்புகளாலும் உடலிற்குள் செல்லுகின்றன. தூய்மையான தண்ணீர், மனித கழிவுகளை சீராக அகற்றும் வழிமுறைகள், நல்ல மருத்துவ மனைகள் முதலியன சரிவர இல்லாத அல்லது இயங்காத நாடுகளில், பெரும்பாலானவை தொற்று நோய் பரவும் வாய்ப்பு அதிகம் என்றால், இயற்கை அழிவினால் சேதமடைந்த இடங்களில் வாழும் மக்களுக்கு எத்தகைய அவலம் காத்திருக்கும் எனக் கூறவேண்டிய அவசியமில்லை. வாந்திபேதி டெங்குப் புக் காய்ச்சல் போன்ற நோய்கள் பரவலாம். வாந்தியினால் ஒரு நாளைக்கு இரண்டு கலன் நீர் உடலிலிருந்து வெளியேறுகிறது. இந் நோய்க்கிருமியின் பிடியிலிருந்து தப் புவது மிகவும் கடினம். ஒருசில மணி நேரத்தில் இறக்க நேரிடலாம்.

வெள்ளப் பெருக்கெடுப்பு ஓய்ந்த பின் அங்கும் இங்கும் நீர்க் குட்டைகள் காணப்படும். அவைகள் மலேரியா நுளம்புகள் பெருகக்கெடுப்பதற்கு சிறந்த தளமாகும். தொற்றுநோய்களைக்கொண்டு செல்லும் சிற்றுயிரினத்தின் மூலம் வாந்தி டெங்குக் காய்ச்சல், தசைநார் வலி, குளிர் நடுக்கம் முதலிய நோய்கள் பரவும், குறிப்பாக, இச் சந்தர்ப்பங்களில் இரவும் பகலும் அடைப்பற்று வெளியே காலத்தைக் கழிக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாவதால், இந் நோய்கள் தொற்றும் ஆபத்து அதிகமாகிறது.

இலவிடமின்றி முட்டுமுட்டான கூடாரங்களில் அல்லது பள்ளிக்கூடங்களில் பெரும் எண்ணிக்கையில் பகலிரவைக் கழிக்க வேண்டியிருப்பதால் மூச்சுடன் சம்பந்தப்பட்ட நோய்களான நுரையீரற் காய்ச்சல், தொற்றுக் காய்ச்சல் முதலியவை ஏற்படும் அபாயம் பெரிதாக உள்ளது. மற்றவர்களுடன் முட்டிக்கொள்வதாலும் தும்மல், இருமல் போன்றவைகளாலும் இவ்வாபத்து பல முறை அதிகரிக்கும். மேற்கூறப்பட்ட வருத்தங்களால் அதிகமாகப் பாதிக்கப்படுவது குழந்தைகளும் முதியவர்களுமே!

உடற்பாதிப்புக்களையும் விட உள்ளப்பாதிப்புக்களுக்கு பலரும் ஆளாக்கப்படுகிறார்கள். அச்சமூட்டும் கொடூரக்கனவுகள், நினைவாற்றலிழப்பு, முயற்சிசெய்ய விருப்பமற்ற போக்கு, அடிக்கடி மனக்கண்முன் தோன்றும் பயங்கரப் படிமங்கள், இவைகளால் பெரிய பாதிப்புக்கு உளளாகின்றார்கள்.

பலருக்கு இயல்பு வாழ்விற்குத் திரும்புவது கடினமாக இருக்கும் பெற்றோர் இல்லாமலும் குடும்பத்தினர் இல்லாமலும், ஏன் குடியிருந்த கிரமமே இல்லாமலும் வாழவேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு உள்ளானவர்கள் காலஞ்செல்லச் செல்ல மன நோயாளிகளாகவே மாற வாய்ப்புண்டு.

26.12.2004 இனால் அதிகம் பாதிக்கப்பட்டது சிறுவர்கள்தான் என்பது உறுதியாகிவிட்டது. ஆழிப் பேர அடுக்கு அலைகள் தொட்டழித்த நாடுகளில் இறந்தோர் தொகையில் மூன்றில் ஒரு பகுதி சிறுவர்களே! பல சிறுவர்கள், குழந்தைகள் பெற்றோரையும் உறவினரையும் இழந்து தனிக்கட்டைகளாக மாறி, நல்லவர்களினதும், தீயவர்களினதும் கவ [illegible]த்துள்ளனர். அவர்களைக் களவாக எடுத்துச்செல்ல முனைபவர்களும், விலைபேசி வாங்க வருபவர்களும் கொஞ்சமல்ல. மறுபுறம், தத்தெடுத்து வளர்ப்பதற்கு முண்டியடித்துக்கொண்டு பலர் நிற்கின்றனர்.

எட்டுவயதிலிருந்து பதினைந்து வயதிற்குள்ளான பிள்ளைகள் உளபாதிப்படைய பெரிதும் வாய்ப்பிருக்கிறது. இவர்களுக்கு ஓரளவில் என்ன நடந்தது என்று தெரியும். உளவள ஆலோசனை செய்யும் பணிகளில் ஈடுபடுவோர் இவர்களுக்குத் தகுந்த முறையில் உதவி செய்யாவிட்டால், பின்னொரு காலத்தில் இவர்களிற் பலரும் குடி, போதை உட்கொள்ளல் போன்ற பழக்கங்களுக்கு ஆளாக நேரிடும். கணவனை இழந்த பெண்களும் தனியே நின்று குடும்பச் சுமை அனைத்தையும் தாங்கும் பொறுப்பில் உள்ளவர்களும் உள நோயின் பல வடிவங்களுக்கு ஆளாகலாம். அனைத்தையும் இழந்தவர்கள் தற்கொலை செய்ய முனைவதும் இயல்பு. ஆக, இச்சூழ்நிலையில் உளவள ஆற்றுகைக்கு செல்வோரின் பணி மிகவும் தேவையாக அமையும்.

இன்னும் ஒரு சோகக்குறிப்பு: மீனுவக்குடும்பங்களில் பெண்கள் பலர் கொல்லப்பட்டிருக்கின்றனர். மீனுவப் பின்னணியில் குழந்தைகளின் வளாப்பு முழுவதும் வீட்டிலுள்ள தாயில் தங்கியுள்ளது. மனைவி இல்லாத இல்லங்களும் தாயில்லாப் பிள்ளைகளும் நம் நாட்டு மக்கள் நடுவில் அதிகரித்துள்ளது. இந்நிலை பல சிக்கல்களை நாளைக்கு உருவாக்கப் போகிறது.

### அனுதாப அலைகள்

நம் வாழ் நாட்களில் நிகழ்ந்த இயற்கை அவல நிகழ்ச்சி எதனையும்விட 26.12.2004 உலகம் முழுவதன் அனுதாபத்தையும் பெற்றது. அதைத்தொடர்ந்து வரலாறு காணாத வகையில் நாடுகளும், அமைப்புகளும் தனிப்பட்டவர்களும் பொருளாயும் பொன்னாயும் அள்ளி இறைத்தனர். விமானங்கள், உலங்கு வான் ஊர்திகள், கப்பல்கள், உணவு, மருந்து, உடுபுடவை உள்ளிட்ட பல்வேறு நிவாரணப் பொருட்களுடனும் தாதியர், மருத்துவர், வேறு வேறு துறை வல்லுனர்களுடனும் இலங்கைக்கு விரைந்தனர். பல்வேறு விதமான அரசியற் பின்னணிகள் இவ்வுதவிக்கரங்களுக்கு உந்துசக்திகளாக விளங்கினாலும், ஒருசில நாடுகளின் செயற்பாடுகள் மனிதாபிமான இலக்கணத்தின் எடுத்துக்காட்டுகளாக இல்லாதுவிடினும் மனிதம் வாழ்கின்றது. அயலவரின் அவலங்களின் உளளாரப் பங்கெடுத்து உதவும் பொதுநலப்போக்கு நுகரியலால் வரையறை செய்யப்பட்ட இன்றைய உலகிலும் உயிர்த்துடிப்புடன் வீறுநடை போடுகின்றது. என்பதைக் கோடிட்டு நின்கின்றது.

### நடந்தும் நடக்கவிருப்பதும்

26.12.2004 போல் ஒரு நிகழ்ச்சி 1883இல் நடந்தது. இந்தோனேசியாவின் கிறக்கட்டோவா எரிமலையின் குமுறல் காரணமாக இந்தியப் பெருங்கடல் 36,000 உயிர்களைக் காவு கொண்டது. ஐரோப்பாவின் பெரும ஆழிப்பேர் அடுக்கு அலைகள் ஆழிவு 1755 இல் நடந்தது. போர்த்துக்கல் நாட்டுக்கு அண்மையில் அத்திலாந்திக் பெரும்கடலில் ஏற்பட்ட நில அதிர்வின விளைவாக பேரலைகள் உருவாகி லிஸ்பன் நகரத்தைச் சேதத்துக்குள்ளாகியது. கடலாலும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட தீயினாலும் அங்கு இறந்தவர்களின் தொகை 60.000.

120,000 ஆண்டுகளுக்கு முன்பு ஹாவாய்த் தீவுகளில் உள்ள மவுனாலோஆ வின் மண்சரிவால் ஆழிப்பேர் அடுக்கு அலைகள் உருவாகி அதே தீவின் கோஹலாவில் ஐந்தாறு மீற்றர் உயரத்துக்கு மண்ணையும் கடலின் புதைபடிவப் பொருட்களையும் வீசியிருக்கிறது. அதே விதம் கி.மு. 7100 மட்டில் நீருக்குள் மண்சரிவு ஏற்பட்டு நோர்வேக் கடற்கரைகளில் மண்புட்டிகளை உருவாக்கியுள்ளது என ஆய்வாளர் கருதுகின்றனர்.

அண்மைக்கால ஆய்வுகளின்படி கடல் படுக்கையிற் பாரிய அளவிலான சிதைகூளங்கள் காணப்படுகின்றன. இவைகள் மண்சரிவுகளின் விளைவுகளாகத்தான் இருக்கவேண்டும். இரணடு மில்லியன் (2000,000) ஆண்டுகளுக்கு முன் ஹாவாய்த் தீவுகளில ஒன்றான ஒஹுவுத்தீவில் நிகழ்ந்த மண் சரிவால் 40,000 கனசதுர கிலோ மீற்றர் நிலம் கடலுக்குள் சரிந்தது. அதனால் மிகப்பெரிய ஆழிப்பேர்அடுக்கு அலைகள் உருவாகின.

மிகவும் விரைவில் எதிர்பார்க்கக் கூடிய நிகழ்வு: லாபால்மா என்னும் தீவில் ஓர் எரிமலை உண்டு. அவ்வெரிமலை 1949இல் குழம்பு, சாம்பல், பாறைப்பொருட்கள், வாயுக்கள போன்றவைகளை வெளியே வெடித்துவரச்செய்து ஒரு பெரிய வெடிப்பை உருவாக்கியுள்ளது. இனனும் ஒரு தடவை இவ்வெரிமலை சீற்றம் கொண்டு வெடித்தால் 400 கன சதுர கிலோமீற்றர் நிறையுள்ள பாளத்தை மணிக்கு முநநூறு கிலோ மீற்றர் வேகத்தில் கடலுக்கு தள்ளும். அந் நிகழ்ச்சி கடல் அலை களை உருவாக்க நூறு மீற்றர் உயரமான பேர் அலைகளை ஆபிரிக்கக் கண்டத்து கரைகளிலும் 25 மீற்றர் பேர் அலைகளை அமெரிக்கக் கண்டக் கரைகளிலும் செலுத்தும்.

தவிர, 1.1 கிலோ மீற்றர் நீளமுடைய குறுங்கோள் ஒன்று அத்லாந்திக் பெருங்கடலினுள் விரைவில் விழப் போகின்றது என்று எதிர்பார்க்கப்படுகன்றது. அது அமெரிக்க, ஐரோப்பிய கண்டங்களுக்கு நூறு மீற்றர்கட்கு உயரமான அலைகளை அனுப்பும் என ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

### வருமுன் காத்தல்

1946ஏப்ரல் ஒன்றில் பசுபிக் மாகடலில் அலஸ்க்காவுக்கு அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கம், ஐந்து மணி நேரத்துக்குப்பின் ஹாவாய்த் தீவின் கரையில் பேரழிவை ஏற்படுத்தியது. இதன் விளைவாக 1948இல் பசுபிக் மாகடல் ஆழிப்பேர் அடுக்கு அலைகளின் முன் எச்சரிக்கைமையம் அத்தீவில் அமைக்கப்பட்டது. அம் மையத்தில் ஓயாது செயற் பட்டுக் கொண்டிருந்த கருவிகளால் 2004 டிசமபர் 26ஆம் நாள் பி.ப.மூன்று மணியளவில் இந்தியப் பெருங்கடலில் சுமாத்ராவுக்கு தெற்கேயுள்ள கொககோஸ் தீவுகளில் நிறுத்தப்பட்டிருந்த நில அதிர்வு மானியில் ஒரு நில நடுக்கம் ஏற்பட்டதற்கான அறிகுறிகள் பதிவுசெய்யப்பட்டன. அதன் அளவை றிக்ரர் அளவையின்படி 8.0 ஆக கணிபபிடப்பட்டது.

அந்நில அதிர்வினால் பேராபத்து எதுவும், குறிப்பாக, பசுபிக் சமுத்திரக் கரையோரங்களுக்கு வராது என்ற தகவல் பி.ப.3.14 மணிக்கு அன்று கடமையிலிருந்து ஸ்ருவாட் வைன்ஸ்வரன் என்பவரால் ஹாவாய் நிலையத்துடன் வழமையாக தொடர்பு கொண்ட இடங்களுக்கு அனுப்பப்பட்டது.

அரைமணி நேர இடைவெளிக்குள், நிலநடுக்கத்தின் அளவு 8.0 லிருந்து 8.5ஆக உயர்ந்தது. அப்போதுதான் ஆழிப்பேர் அடுக்கு அலைகள் உருவாகும் அபாயம் உண்டு என உணரப்பட்டு, அம் மையத்தின் பொறுப்பாளர் தொலைபேசி மூலம் வரவழைக்கப்பட்டு அவசரச் செய்திகள் அனுப்பப்பட்டன. ஆனால் அச் செய்திகளால் பயன் ஏதும் கிட்டவில்லை. அவ்விடைவேளையில் ஆயிரக்கணக்கில் உயிர்கள் பறிபோய் விட்டனவே!

சென்ற ஆண்டு ஆடி ஆவணி மாதங்களில் சுமாத்ராத் தீவின் மேற்குப் பகுதிக்கு ஆய்வாளர்கள் ஒரு சிலர் சென்று அங்கு "விரைவில்" பூமி அதிர்வும் கடற்பொருக்கும் நிகழலாம் என அறிவித்தனர். மக்களால் அதை நம்ப முடிய வில்லை. 1797, 1833, 1861 ஆண்டுகளில் அப்படியான நிகழ்ச்சிகள் நடந்துள்ளன என்றும் அப்படி நடக்கும்போது கரையை விட்டு உயர மான இடங்களுக்கு மக்கள் ஓடிச் செல்ல வேண்டும் என்றும் தற்காப்புப் பரப்புரைகள் வழங்கப்பட்டன.

பூமி அதிர்வை எதிர்வுகூற முடியாததுபோல ஆழிப்பேர் அடுக்கு அலைகள் பற்றியும் முன்கூட்டியே அறிந்துகொள்ள முடியாது. நூற்றாண்டுக்கு ஒருமுறையாவது ஒரே இடததில் நிகழுமா என்ற கேள்விக்கு பதில் அளிப்பது முதலாக கடினம். அது எப்போது, எங்கே, எப்படி வரும் என்று எதிர்வுகூறுவது இன்றைய அறிவியலில் சுலபம் அன்று. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. அதற்குக் காரணமான நில அதிர்வையும்விட அதிக அழிப்பு சக்தியைக் கொண்டது. அதன் தாக்கத்தின் எல்லை பற்றிக கூறுவது கடினம். எடுத்துக்காட்டாக அண்மையில் நிகழ்ந்த கடல் அலைகளின் தாண்டவம், பூமி நடுக்க மையத்திலிருந்து 1600 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள இலங்கைத்தீவை இப்படித் தாக்கும் என்பதை எந்த விற்பன்னரும் எதிர்பார்க்கவில்லை.

நில அதிர்வின் விசையிலிருந்து மட்டும் ஆழிப்பேர் அடுக்கு அலைகள் பற்றி அறிந்துவிட முடியாது. கடற்கரையிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரமாக அலைகளின் உயரத்தை அளவிடக் கருவிகள் பசுபிக் கடலோரத்தில் பொருத்தப்பட்டுள்ளன. அத்தோடு கரையிலிருந்து வெகுதூரத்தில் அலைகளின் அமுக்கத்தைப் பதிவுசெய்யக்கூடிய நுட்பமான கருவிகள் கடல்படுக்கையில் வைக்கப்படுகின்றன. இவைகள் அனுப்பும் சமிக்கைகள் செய்மதி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு ஆய்வு செய்யப்படும். இத்தகைய கருவிகள் இந்தியப் பெருங்கடலில் இயக்கப்பட்டிருபபின் 26.12.2004 இத்துணைப் பேரழிவை விளைவித்திருக்காது.

### விடுகதைகள் அல்ல

தமிழ் மக்களுடைய இலக்கிய ஏடுகளில் "கடல் கோள்" பற்றிக் கூறப்படுகிறது. "பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்கு மரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள" (மதுரைக் காண்டம், காடுகாண் காதை) எனச சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ அடிகள் வரலாற்றுத் தரவொன்றை பதிவு செய்துள்ளார். சிலப்பதிகார உரையாசிரியர் அடியாக்கு நல்லார் குமரிக் கண்டததில் நிகழ்ந்த கடற்கோள் நாற்பத் தொன்பது நாடுகளை அழித் தாக வேனற்காதைக்கு செய்த உரை யில் குறிப்பிடுகிறார். தமிழ் மக்கள் நடுவில் இத்தகைய "பழங்கதைகள" பாரம் பரியங்கள் நிலவி வந்தது என்பது தெளிவு முதற்சங்கம் கூறும தென் மதுரை, இடைச்சங்கத்துடன் தொடர்புடைய கபாடபுரம் மற்று காவிரிப்பூம்பட்டினம், கங்கை கொணட சோழேஸ்வரம் முதலிய இடங்கள் கடற்கோளினால் அழிக் கப்பட்டவை என்ற செய்திகளும், மற்றும், திருநூல போன்ற சமய ஏடுகளில் வெள்ள அழிவுகள் பற்றி எழுதப்பட்ட பழங்கதைகளும் நிராகரிக்கப்படக் கூடியவையல்ல என்பதை 26.12.2004 எடுத்துக்காட்டுகிறது. முற்றும்)

---

## கட்டடங்களை அகற்ற உத்தரவு

(பொன்னாலை)

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் சேதமடைந்த நிலையில் காணப்படும் வைத்திய அதிகாரி விடுதி, வாகனத் தரிப்பிடம், சமையலறை சிற்றூண்டிச் சாலை, பதிவு வைத்திய அதிகாரி விடுதி ஆகிய கட்டடங்களை அகற்றிவிடுமாறு மாவட்டப் பிரதி சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி செ.அம்பிகைபாகனுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து கட்டட இடிபாடுகளை அகற்றும்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தராக திருமதி வ.திரிபுரபவன் கடமையேற்றுள்ளார்.

முன்னர் மாவட்ட செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய தம்பையா நடராசா வலிகிழக்கு பிரதேச சபையின் செயலாளராக பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ளார்.

இதகையடுத்து யாழ்.மாட்ட செயலகத்தின் ஸ்தாபனக் கிளையின் பிரதம எழுதுவினைஞராக இருந்த திருமதி வ.திரிபுரபவன் இம் மாதம் 2ஆம் திகதியில் இருந்து நிர்வாக உத்தியோகத்தராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ற-19)

## சந்தேக நபர்கள் இருவர் கைது

(கொழும்பு)

கலவானை பிரதேச சபையின் ஐக்கியதேசியக்கட்சியின் உறுப்பினரைச் சுட்டுக்கொன்ற சந்தேக நபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் பயணம்செய்த மோட்டார் வாகனம் மற்றும் துப்பாக்கிகள் என்பனவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கலவானை பிரதேச சபையால் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் 'நற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்டமை தெரிந்ததே. (ற-8)

## ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் ஞானச்சுடர் இதழின் சித்திரை மாத மலர் வெளிவந்துள்ளது. (ற-2)

## தமிழ் அதிகாரிகளை நியமிக்க கோரிக்கை

(கேகாலை)

கேகாலை மாவட்டத்தில் உள்ள சகல அரச வைததியசாலைகளிலும் திடீர் மரண விசாரணை அதிகாரிகளாக பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்தவர்களே கடமையாற்றி வருகின்றனர்.

இம்மாவட்டததில் தமிழ், முஸ்லிம் மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் உள்ள வைத்திய சாலைகளுக்குத் தமிழ் தெரிந்த மரண விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் என இம் மாவட்டத்தில் வசிக்கும் தமிழ், முஸ்லிம் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கேகாலை மாவட்டத்தின் எட்டியாந்தோட்டை, தெரணியாகலை, ருவன்வெல்ல ஆகிய இடங்களில் தமிழர்கள் செரிவாக வாழ்வதனால் தமிழ் தெரிந்த திடீர் மரண விசாரணை அதிகாரிகளையும் மற்றும் றம்புக்கனை, ஹொம்மாத்தகம, வரக்காபொல போன்ற இடங்களுக்கு முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ஒருவரையும் திடீர் மரண விசாரணை அதிகாரிகளாக நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்படுகிறது.

தமிழ்மொழி தெரியாத பெரும்பான்மை இன அதிகாரிகளே தற்போது கடமையிலுள்ளதால் மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் தமிழ், முஸ்லிம் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகிறது. நீண்ட காலமாக இப்பிரச் சினைக்கு தீர்வைப் பெற்றுத் தரு மாறு இப்பகுதி அரசியல்வாதிகளிடம் கோரிக்கை விடுத்தும் அவை பயனளிக்கவில்லை. எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-2)

### சாவதுதான் இனிமேல் வழியா?

போவதெங்கே சோதரரே சுமைகள் தூக்கி?
புகலிடம்யார் தருவார் உம் துயரம் போக்கி?
சாவதுதான் தமிழர்களுக்கு வழியா, இல்லை
சமரிடவே தூக்கிடுவோம் போர்த் துப்பாக்கி!

வ.சின்னப்பா,
தனங்கிளப்பு.

### சுமை தாங்கி

வந்தது பலமுறை நிலநடுக்கம்
இந்தோனேஷியாவில் மரண பயம்
குடும்பத் தலைவரை இழந்ததனால்
சுமைதாங்கி ஆகினால் அபலைப் பெண்
குழந்தைகளுடன் முடிச்சுக்களையும்
சுமந்துகொண்டு செல்வது எங்கே?

ம.கீதா

### இடம் பெயர்வு

சுழன்று வந்த
சுனாமி அலையினால்
சுதந்திரமாக இருக்க
இல்லிடமின்றி
சுழன்று திரிந்து
கணவனைப் பறிகொடுத்த
நிலையில்
சுதியற்று கடும் வேதனையுடன்
பெற்ற பிள்ளைகளோடு
இடம்பெயர்ந்து
செல்கின்றாள் மாது.

திருமதி.S.பாக்கியநாதன்.
வட்டுக்கோட்டை.

## மௌனத்தின்



### சுமைகளைச் சுமந்தபடி...

சுமாத்திராவில் தோன்றிய
சுனாமி எனும் அரக்கனால்
சுற்றம் புடைசூழச்
சுமைகளைச் சுமந்தபடி
சுகங்களை இழந்தபடி
சுற்றித்திரிகிறீர் - ஊரெலாம்.
சுழலும் புவிதனில்
சுதந்திரமாய் வாழ முடியுமென
உன் சுந்தர வதனத்தில்
-தெரியுது
சுகமான வாழ்வின் - இனிய
சுருதி

கு.குகநாதன்,
தம்பசிட்டி.

### நாடோடியாய்...

தமிழராய்ப் பிறந்ததால்
இடம்பெயர்வே
வாழ்க்கையாச்சு!
நாடோடியாய் நாம்
திரியும் வாழ்வு
என்று மாறுமோ...?

V.தர்சன், நாவலர்வீதி.

## தேடல்கள் - 57

### விடிவின் பாதை...

சுனாமி தந்த இழப்பில்
குடும்பச் சுமை தாங்கிய
பெற்றவனை இழந்த
பள்ளி செல்லும் பாலகரே
பொதி சுமையுடன்
குடும்பச் சுமையும் தாங்கி
விடிவின் பாதை நோக்கி
செல்கின்றீரோ....

N.நிகா,
உடுவில்.

### குடும்பச் சுமை

மூன்றாம் ஆண்டு படிப்பதற்குள்
முந்தி வந்த பேரலையால்
முதுகெலும்பான தந்தை இறந்துவிட
மூட்டை முடிச்சுடனே
முன்னோக்கி நடக்கின்றாய்
முன்னோர்கள் போற்றிடவே
முழுப் பாரத்தையும் இறக்கிவைத்து
முயற்சியுடன் படித்து நீயும்
முன்னேற்றம் கண்டிடுவாய்.

*க.சுகிரதன், சங்கானை.*

## மௌனத்தின் தேடல்கள் - 59



அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றும் உள்ளத்து
உணர்வுகளை
**மிகச் சிறிய**
கவிதைகளாக்கித்
**தபால் அட்டையில்**
வலம்புரி -சங்குநாதத்திற்கு
அனுப்பிவையுங்கள்.
***கிடைக்கவேண்டிய***
**இறுதித் திகதி** - 09.05.2005
அனுபபவேண்டிய
முகவரி:-
மௌனத்தின்தேடல்கள்- 59
**வலம்புரி - சங்குநாதம்**
15, வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

# கவிதைக் கலசம்

### பாட்டாளி ஆள வேண்டும்

மேடை கட்டிக் கட்டி பேசியுமென்ன
மேதினமும் வந்துவந்து போயுமென்ன
பாடுபடும் தொழிலாளி உயரவில்லை
பாரினிலே அவன் சிறக்கவில்லை

மாடிவீடு கட்டும் தொழிலாளி
மண் குடிசை வாசி ஏன் யோசி!
பயிர் வளர்த்து உயிர் காக்கும் விவசாயி
பஞ்சத்திலே வாடுவதேன் யோசி!

பாடுபடும் பாட்டாளி வர்க்கம் ஆளவேண்டும்
பாரினிலே அவன் நிலை உயரவேண்டும்
யாரும் ஏழையில்லை என்றாகவேண்டும்
போரும் ஒழிந்து சமாதானம் மலரவேண்டும்.

நீர்வை ~ இ.தியாகராசா.

### எனக்காய் அழு....



எந்தன்
பேனாவே எனக்காக
கொஞ்சம் அழு...!

என் நிலை
கண்டு கொஞ்சம் கலங்கு!
நீ... அழுதால்தான் -என்
கண்ணீரை அவளும்
அறியமுடியும்!

வெள்ளைத் தாள் போல
வெறுமையாய் இருந்தபோது
இருந்த இன்பம்
காதல் எனும் கவிதை
எழுதிய பின்னாள் எங்கோ
தொலைந்துவிட்டது!

என் அருமை பேனாவே!
உனக்குள் - என்
வேதனைகளை
நிரப்பியிருக்கிறேன் - அவள்
அறியும் படியாய் எழுது!

கன்னி நெஞ்சம்
கல் என்று சொல்கிறார்கள் - அது
கரையும் படியாய் எழுது!
வெறும் மை இல்லை!
உண்மை என்பதை
உணரும்படி எழுது!

*த.அனுராஜ்,*
*வண்ணார்பண்ணை.*

### சொல்லாமல் வந்தது

மாலையாக முன்
உதிர்ந்து போன
மனப் பூக்கள்
வாடிப் போகாமலிருக்க
நீர் தூவுகிறது
கண்கள்!
வேளை வராமலே
முடிந்துபோன பயணத்தின்
எச்சங்களை
கணக்குப் பார்க்கிறது
இதயம்!
மீண்டும் மீண்டும்
இரைமீட்டும்
மெல்லப்படாமல் - நீ
சொல்லிச் சென்ற
கடைசி வார்த்தை
இன்னும் செவிகளில்!
எல்லாவற்றையும்
இணைத்து யோசித்தபோதுதான்
எதுவுமே
யோசிக்கப்படவில்லை
என்பதும் புரிந்தது! - எனக்கு
சொல்லாமல் வந்தது
காதல் - சொல்லாமல்
போகாதா?

நெற்கொழுதாசன்,
வல்வை.

### கன்னித் தமிழே!



உன் கையால்
வரையப்படுவதுதான்
எனக்கு ஓவியம்!
உன் உதட்டு மொழிகள்
நான் காதலிக்கும்
புதுக் கவிதை!

தென்றலாடும்
பாதங்களில்
சலங்கை பூட்டி
நீ அசைந்த போதில்
இசையால் கட்டி எனை
சந்தோச கிரகத்திற்கு
கூட்டிச் சென்றாயே!

உன்னால் எங்ஙனம்
முடிகின்றது
எனக்குள் சாதனை படைக்க?
சபாஷ் - நீ
அபூர்வ ஜோதி!

துயிலுக்கும் மயிலுக்கும்
அருவிக்கும் தென்றலுக்கும்
ஆசான் நீ தானா - சொல்!
தமிழ் நங்கையே சொல்!

மண் தோன்றாக் காலத்து
முன் தோன்றியவளே...!
காப்பியங்களை அணிந்து
கலியுகத்திலும் பயணிக்கின்றாயே
பூக்கள் வாடாமல்
புதிய கனி பிறப்பதில்லை
ஈக்கள் தேடாமல்
இன்சுவை மலர்வதில்லை
இன்பத் தமிழே!
கன்னி மொழியே!
நாவுகள் உனக்கே சொந்தம்
நீயே எமக்குத் தஞ்சம்!

ஜோ.ஜெஸ்ரின், கொழும்புத்துறை.

### சினிமா மோகம்...

வீட்டுக்கொரு T.V
வீடியோப் படக்காட்சி - பல
பெயர்களிலே சினிமாப் படம்
பாலர் வகுப்புப் பையன்
கூறுவான்....
எல்லாப் படப் பெயரும் - கூட
நாயகன், நாயகி பெயர் - ஆனால்
சரியாகச் சொல்லமாட்டான்
புத்தகப் பாடங்களை!
எண்ணிப் பார்க்கையிலே
எம் மண்ணும் ஆகின்றது
இன்னொரு தமிழ் நாடாய்.

இ.சிறீ,
யாழ்ப்பாணம்.




# மனம் விட்டுப் பேசுவோமா?

அனைத்து துறைகளிலும் சாதனைபடைப்பவர்களான இன்று பெண்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு மத்தியில் சுயமாக முடிவெடுத்து தனி மனுஷியாக காரியங்களைச் செய்து முடிக்கத் தெரியாத பெண்களும் நம் மத்தியில் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

கணவனுடைய சம்பளம் எவ்வளவு?, எவ்வளவு பணம் செலவாகிறது?, கடன் எவ்வளவு இருக்கிறது?, எவ்வளவு பணம் சேமிக்கப்படுகின்றது? போன்ற முக்கிய விஷயங்களைக் கூட தெரிந்திராத பல இல்லத்தரசிகள் இருக்கிறார்கள். என்ன சமைப்பது? கொண்டாட்டங்களுக்கு என்ன ஆடை அணிவது ஆகிய விஷயங்களுடன் இவர்களது முடிவெடுக்கும் ஆற்றல் நின்று விடுகின்றது.

பல வீடுகளில் வீட்டுக்குத் தேவையானவற்றை வாங்குவது, வங்கிக்கு செல்வது, பிள்ளைகளைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்வது போன்ற எல்லா வேலைகளையும் கணவனே செய்வதுண்டு. இதனால் பல பெண்கள் எல்லா வேலைகளையும் அவரே பொறுப்பெடுத்து செய்வதால் நான் எதைப் பற்றியும் கவலைப்படுவதேயில்லை என்று பெருமையாகச் சொல்வதைக் கேட்கிறோம். இவர்கள் ஆபத்து ஏற்படும்வேளை எதுவும் செய்யமாட்டார்கள். இப்படியான குடும்பங்களில் திடீரென்று கணவனுக்கு ஏதாவது நிகழ்ந்துவட்டால் மனைவியின் நிலை என்ன? தனிதது அவளால் எனன செய்துவிட முடியும்? தனியாளாக குடும்பத்தை எப்படிக் கொண்டு நடாத்த முடியும்?



இவ்வாறு பெண்கள் ஒருபோதும் அறியாமைக்குள் இருந்து விடக்கூடாது. அறியாமை என்பது மிகப் பெரிய பலவீனம். அதிலும் பெண்கள் பலவீனமாக இருந்து விட்டால் அதனைப் பலரும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

கணவர்கள் வீட்டுப் பொறுப்புகள் முழுவதையும் தாமே ஏற்கக்கூடாது. அதேபோன்று வரவு செலவுகளையும் முழுமையாகத் தாமே பார்த்துக்கொள்ளக் கூடாது. கணவர்கள் இப்படி இருப்பதற்கு என்ன காரணம்?

சில கணவர்கள் மனைவி மீது உயிரையே வைத்திருப்பார்கள். ஆனால், வரவு செலவுகளையும் வீட்டுப் பொறுப்புகளையும் தாமே பார்த்துக்கொள்வார்கள். இதற்குக் காரணம் மனைவியின் நிர்வாகத்திறன் மீது இவர்களுக்கு நம்பிக்கையில்லாததுதான். இன்னும சில கணவன்மார்கள் ஆணாதிக்க மனநிலை உடையவர்கள். இவர்கள் தாமே எல்லாவற்றையும் செய்யவேண்டும் என்ற எண்ணமுடையவர்கள்.

சகோதரிகளே! சற்று சிந்தியுங்கள். நிர்வாகத்தில் நீங்கள் சளைத்தவர்கள் அல்ல என்பதைக் கணவருக்கு புரியவையுங்கள். கணவனுடன் மனம வட்டு பேசுங்கள். ஆலோசனைகள கூறுங்கள். திட்டமிட்டு செயற்படுங்கள். 'மனைவி ஒரு மந்திரி' என்று நம் முன்னோர்கள சும்மாவா சொன்னார்கள். விதை உடனேயே மரமாகி பயன தருவதில்லை. அதேபோன்று உங்கள் ஆலோசனைகளும் காலப்போக்கில் கணவனால் ஏற்றுக்கொள்ளப்படும்! இனியென்ன, கணவனுக்கு எந்நாளும் நிம்மதிதான்.

## சமைத்துச் சுவைப்போம்

### ஆப்பிள் ஐஸ்கிரீம்



தேவையான பொருட்கள்:

| | | |
|---|---|---|
| [illegible] ஆப்பிள் | - | 2 |
| சீனி | - | 4 மேசைகரண்டி |
| பால்பவுடர் | - | 4 மேசைகரண்டி |
| மில்க் கிரீம் | - | 1கப் |
| பால் | - | 1கப் |
| கராம்பு | - | சிறிதளவு |
| முந்திரி | - | 8 |

***செய்முறை:***

ஆப்பிள் பழத்தையும் சீனியையும், பால் பவுடரையும், மில்க் கிரீமையும், பாலையும் ஒன்றாகச் சேர்த்துக் கலந்து - முட்டையை அடிப்பது போல அடித்துக்கொள்ள வேண்டும். அத்துடன் கராம்புத் தூளையும் முந்திரிப் பருப்பையும் கூடச் சேர்த்துக் கொள்ளவும்.

ஒன்றுடன் ஒன்று நன்றாக இவை கலந்தவுடன் இதனை ஐஸ் ஆகக்கூடிய ட்ரேக்களில் ஊற்றி, அதனை அப்படியே பிரிட்ஜில் வைத்துவிடவும். இரண்டு மணிநேரம் கழித்து இதனை வெளியில் எடுத்து விடவும். மிகவும் சுவையாக இருக்கும்.

# தலைமுடி நரைப்பதைத் தவிர்க்க முடியும்



பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கிடையே இளம் வயதிலே வயது முதிர்வுப் பிரச்சினை வேகமாகப் பரவி வருகிறது. அழகு சாதனப் பொருள்களுக்கு அடிமையாவதன் மூலம் பெண்களுக்கு முடி நரைத்தல் ஆகிய பிரச்சினைகள் தோன்றுகின்றன. இதிலிருந்து விடுபட வழி இருக்கிறது? அதற்கு முன் தலைமுடி நரைப்பதற்கான காரணங்களை அறிந்து கொள்ளுங்கள்.

இளம் வயதில் வயது முதிர்வு பிரச்சினை தோன்றுவதறகான காரணங்கள்: -

உடலில் அடிப்படையாக வாதம், பித்தம் ஆகியவை அதிகரிப்பதன் மூலம்தான் இளம் வயது முதிர்வுப் பிரச்சினை வருகிறதென ஆயுர்வேதம் கூறுகிறது.

உலர்ந்துபோன உணவு, காரம், உப்பு நிறைந்த, புளிப்பு மற்றும் வறுக்கப்பட்ட உணவுகள், முளைவிட்ட தானியங்கள், புதிய தானியங்கள், சோடியம் கை கார்பனேட் சேர்த்து தயாரிக்கப்பட்ட உணவு, பசியில்லாத போது அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுதல் மற்றும் நொதிக்க வைக்கப்பட்ட பானங்களைக் குடித்தல் ஆகியவை முதிர்வு ஏற்படும் காரணிகளை அதிகரிக்கிறது. இதன் 'காரணமாகவே இளம் வயது முதிர்வு ஏற்படுகிறது.

பகலில் தூங்குதல், முறையற்ற அல்லது அதிகப்படியான உடற்பயிற்சி, உடல் மற்றும் மனரீதியான மன அழுத்தம், கோபப்படுதல் ஆகியவை விரைவில் முதிர்வை அதிகரிக்கிறது.

**தினசரி தவறாமல் கடைப் பிடிக்க வேண்டிய வழிமுறைகள்:**

* அதிகாலையில் விழித்தல், குறிப்பிட்ட நேரத்தில் சிறுநீர் கழித்தல் ஆகியவற்றை ஒரு பழக்கவழக்கமாகக் கொண்டிருத்தல்.

* சூரிய வெப்பத்தால் முகத்தில் எண்ணெய் வடிதல், அழுக்கு சேர்தல் ஆகியவை உண்டாகிறது. முகம் மிருதுத் தன்மை பெறுவதற்கு எண்ணெய் மசாஜ் செய்யவேண்டும்.

* தலை, காதுகள் மற்றும் பாதங்களில் தினசரி மென்மைத் தன்மை கொண்ட எண்ணெய்களைப் பூசுவதன் மூலம் தோல் உலர்வதைத் தடுக்கலாம்.

* எளிதில் கிடைக்கும் எள் எண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெயைப் பூசுவதன் மூலம் நன்கு குளிர்ச்சி தன்மையைப் பெறலாம். இவை முடி கொட்டுதல மற்றும் நரைத்தல் ஆகியவற்றைத் தடுக்கிறது.

* உணவுப் பழக்க வழக்கத்தை ஒழுங்குபடுத்துதல்.

* நீங்கள் உட்கொள்ளும் உணவு இனிப்பு, புளிப்பு, உப்பு, கசப்பு, காரம் மற்றும் உவர்ப்பு ஆகிய ஆறுசுவைகளைக் கொண்டு நடுநிலையுடன் இருக்க வேண்டும்.

* உங்களுடைய உணவில் கோதுமை, பயறு, தேங்காய், கச்சான், வெல்லம், நெய் மற்றும் பழங்கள் ஆகியவற்றைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். இது சருமத்தில் ஈரத் தன்மை மற்றும் வழவழப்புத்தன்மை மூலமாக சருமம் உலர்ந்து போதல் மற்றும் தடிப்பாக மாறுவதைத் தடுக்கிறது.

* இரவில் எளிதில் ஜீரணமாகும் உணவுகளை உண்டபின் குறைந்த பட்சம் 2 மணி நேரத்திற்குப் பிறகு தான் தூங்கச் செல்லவேண்டும்.

* எண்ணெய் மிகுந்த, காரமான, வாசனை நிறைந்த மற்றும் பழைய உணவுகளைத் தவிர்க்கவேண்டும்.


* தினசரி உடற்பயிற்சியாக ஒன்றரை மணிநேரம் வரை வேகமாக நடப்பது முக்கியம். இதனால் வியர்வை வெளியேறி நச்சுப்பொருட்கள் நீக்கப்படுகின்றன.

* குறிப்பிட்ட நேரத்தில் தூங்கச் செல்ல வேண்டும்.

மேற்சொன்ன வழிமுறைகளை தினசரி தவறாமல் கடைப்பிடித்தால் நரைமுடி காணாமல் போய்விடுவது நிச்சயம்.

# வேப்பிலையே... கறிவேப்பிலையே....

கறிவேப்பிலையை மிகச் சாதாரணமாகக் கருதுபவர்களுக்கு சில செய்திகள்....



எந்தக் குழம்பு வைத்தாலும் மேலே மிதந்துகொண்டிருக்கும் கறிவேப்பிலை மிக உயர்ந்த மருத்துவ குணம் கொண்ட தாவரமாகும்.

கறிவேப்பிலையை வெறும் சமையலுக்கு மட்டும் பயன்படுத்தாமல், அதை சம்பலாக அரைத்து சோற்றுடன் சாப்பிட்டால் உடல் ஆரோக்கியத்துக்கு மிகவும் நல்லது. இதனால் கண்பார்வை சீராகும். பளிச்சென்ற பார்வையும் கிடைக்கும். உடலில் உள்ள இரத்தம் சுத்திகரிக்கப்படுவதால் உடலில் மினுமினுப்புக் குறையாது.

எளிதில் உடலைப் பாதிக்கக் கூடிய தொற்றுநோயைத் தடுக்கும் ஆற்றல் கறிவேப்பிலைக்கு நிறையவே உண்டு. புரதம், இரும்புச்சத்து, பொஸ்பரஸ், கொழுப்பு, கார்போஹைட்ரேட், விற்றமின் ஏ, சி இதில் நிரம்ப உள்ளது.

சிலருக்கு தொடர்ந்து வாயில் புண் வந்துகொண்டே இருக்கும். இவர்கள் கறிவேப்பிலையினை உணவில் அடிக்கடி சேர்த்துக் கொள்வது நல்லது. பல்துலக்கும் போது சிலருக்கு இரத்தம் கசியும். காரணம் பல்ஈறுகள் வலுவில்லாமல் அமைந்திருப்பதே. இதற்கு கறிவேப்பிலை மிகச் சிறந்த நிவாரணி.

சிலருக்கு என்ன சாப்பிட்டாலும செரிமானம் ஆகாது. ஜீரணசக்தி குறைவாக இருக்கும். கறிவேப்பிலையை வறுத்து மிளகு, சீரகம், சுக்கு இவற்றைப் பொடிசெய்து உப்பு சேர்த்து சோறுடன் பிசைந்து உண்ணுங்கள். பசி நன்றாக எடுக்கும்.

வயிறு தொடர்பான எந்தச் சிக்கலையும் விரட்டி அடிக்கும் வலிமை கறிவேப்பிலைக்கு அதிகமுண்டு. மலச்சிக்கல் மற்றும் வயிற்றுப் போக்கை கட்டுப்படுத்தும். பித்தம் அதிகமாகி வாந்தி எடுத்துக் கொண்டிருப்பவர்கள் கறிவேப்பிலையை அதிகம் உணவில் சேர்க்கலாம்.

தலையில் ஏற்படும் இளநரையைத் தடுக்கும் ஆற்றல் கறிவேப்பிலைக்கு அதிகமாகவே உண்டு. கறிவேப்பிலையை கெட்டியாக அரைத்து சிறிய வட்ட வடிவத்தில் தட்டி அதை நிழலில் காயவைக்க வேண்டும். நன்றாகக் காய்ந்தவுடன், தேங்காய் எண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொள்ள வேண்டும். தினமும், காலையில் ஒரு மணிநேரம் தலையில் ஊறவைத்துக் குளித்து வந்தால் கறுகறுவென கூந்தல் மாறுவதுடன், அடர்த்தியாகவும் வளர ஆரம்பிக்கும் அதிசயத்தையும் காணலாம்.

என்ன கறிவேப்பிலை பறிக்கக் கிளம்புகிறீர்களா?

# மீள்பார்வை

## பிறியானி விஜேசேகர எழுதிய
## இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

(தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 58



*அரசாங்கப் பணம்*

133. குடியரசின் திரட்டு நிதியத்தை அல்லது குடியரசின் வேறு நிதியங்களைக் கையாளுவதற்கு அல்லது அவற்றின் மீது பொறுப்புகளைச் சுமத்துவதற்கு அல்லது ஏதேனும் வரியை விதிப்பதற்கு அல்லது அப்போதைக்கு வலுவிலிருக்கும் ஏதேனும் வரியை நீக்குவதற்கு கூட்டுவதற்கு அல்லது குறைப்பதற்கு அதிகாரமளிக்கும் பிரேரணை சட்டமூலம் அல்லது அதற்கான திருத்தம் எதுவும் அமைச்சர் ஒருவரால் மாத்திரமே சமர்ப்பிக்கப்படலாம். அவர் அத்தகைய பிரேரணையை, சட்டமூலத்தை அல்லது திருத்தத்தினைக் கொண்டு வருவதன் முன்னர் அத்தகைய பிரேரணைக்கோ,சட்டமூலத்திற்கோ, திருத்தத்திற்கோ அமைச்சரவையின் அங்கீகாரமளிக்கப்பட்டதெனக் குறிப்பிட்டாலன்றி அவற்றைப் பாராளுமன்றம் பரிசீலனை செய்யாது.

*நிலையியற் கட்டளைகளின் திருத்தம்*

நிலையியற் கட்டளைகளைத் திருத்துவதற்காக எந்தவொரு உறுப்பினரும் ஒரு பிரேரணை முன்னறிவித்தல் கொடுக்கலாம். அத்தகைய முன்னறிவித்தலுடன் உத்தேசிக்க[illegible]ட்டுள்ள திருத்தங்களைக் கொண்ட ஒரு வரைவு நிலையியற் கட்டளை இணைக்கப்படல் வேண்டும். இப்பிரேரணை முன்மொழிந்து வழிமொழியப்பட்டதும் அது சபைக்கு விடப்படாமல் நிலையியற் கட்டளைகள் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும். அத்தகைய பிரேரணை எதைப் பற்றியும் நிலையியற் கட்டளைகள் குழு அறிக்கை சமர்ப்பிக்கும் வரை அதில் மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுத்தலாகாது.

*நிலையியற் கட்டளைகள் இடைநிறுத்துதல்*

135. ஒரு விசேட அலுவலைப் பரிசீலிக்க அல்லது முடிவாக்க இயலும் பொருட்டு முன்னறிவித்தல் வழங்கப்பட்ட ஒரு பிரேரணையைப் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதரிப்பதன் மூலம் எந்தவொரு கூட்டத்திலும் ஒரு நிலையியற் கட்டளையை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தி வைக்கலாம்.

எனினும் அமைச்சரவையின் ஓர் அமைச்சரால் பிரேரிக்கப்பட்டாலன்றி இந் நிலையியற் கட்டளையின் கீழ்வரும் ஒரு பிரேரணை வாக்கெடுப்பு வாயிலாகத் தீர்மானிக்கப்படும். வாக்கெடுப்பில் பிரேரணையை ஆதரித்து இருபதுக்குக் குறைவான உறுப்பினர்களே பெரும்பான்மையினராக வாக்களித்தார்களெனக் காணப்படின் பிரேரணை தோல்வியுற்றதாகப் பிரகடனமாகும்.

*சபாநாயகரின் பொது அதிகாரம்*

136. நிலையியற் கட்டளைகளில் ஏற்பாடு செய்யப் பெறாத விடயம் அனைத்திலும் பாராளுமன்ற அலுவலை நடாத்தும் முறையை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் சபாநாயகருக்கு உண்டு.

137. பாராளுமன்றக் கட்டட நிர்வகிப்பும் பாதுகாப்பு ஒழுங்குகளும் பாராளுமன்றச் சபையின் பொது நிர்வாகமும் சபாநாயகரின் பொறுப்பாகும்.

138.இந் நிலையியற் கட்டளைகள் மூலம் சபாநாயகர் ஆற்றக்கூடிய எதையும் சபாநாயகருக்குப் பதிலாகத் தலைமை வகிக்கும் பிரதிச் சபாநாயகரோ குழுக்களின் பிரதித் தவிசாளரோ அல்லது பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவரோ ஆற்றலாம்.

*தவிசாளர் குழாம்*

139.சபாநாயகர் ஒவ்வொரு கூட்டத்தொடரின் ஆரம்பத்திலும் பிரதிச் சபாநாயகராலோ பிரதிச் சபாநாயகர் சமுகமளிக்காத போது குழுக்களின் பிரதித் தவிசாளராலோ கேட்டுக் கொள்ளப்படும் போது தற்காலிகமாகக் குழுக்களின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கு நான்கு உறுப்பினர்களுக்குக் குறையாத ஒரு தவிசாளர் குழாத்தை நியமித்தல் வேண்டும். காலத்திற்குக் காலம் தவிசாளர் குழாத்தின் அமைப்பை அவர் மாற்றலாம். பிரதிச் சபாநாயகருக்குப் பதிலாக ஒரு தற்காலிகத் தவிசாளர் தலைமை வகிக்கும்போது அவர் பிரதிச் சபாநாயகர் ஆற்றக்கூடிய எதையும் ஆற்றலாம். இக் குழாத்திலிருந்தே ஒவ்வொரு நிலையியற் குழுவிற்கான தவிசாளரைச் சபாநாயகர் நியமிப்பார். அவ்வாறு நியமிக்கப்படும் தவிசாளரை காலத்திற்குக் காலம் சபாநாயகர் மாற்றலாம்.

*உறுப்பினர்களைத் தொழில் முறையில் அமர்த்தல்*

140. பாராளுமன்றத்தின் முன்னரோ அல்லது அதன் எந்தவொரு குழுவின் முன்னரோ எந்தவொரு கட்சிக்காரருக்காகவும் வேதனம் அல்லது வெகுமதி பெறவிருக்கும் சட்டத்தரணியாகவோ வேறெந்த முறையிலோ எந்தவொரு உறுப்பினரும் தோற்றலாகாது.

*சாட்சிகளின் செலவு*

141.அக்காலத்தில் வலுவிலிருக்கும் ஒழுங்குவிதிகளுக்கமைய ஒரு சாட்சியாக நீதிமன்றத்தில் சமுகமளிக்கும் ஒருவருக்கு வழங்க வேண்டிய தொகையே ஓர் ஆவணத்தைச் சமர்ப்பிக்கும்படி அல்லது நேரில் சமுகமளிக்கும் படி அழைப்பாணை அனுப்பப்படும் ஒருவரின் செலவுகளுக்காக வழங்கப்படலாம்.

*எஞ்சிய அதிகாரங்கள்*

142. இந் நிலையியற் கட்டளைகளில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்படாத எல்லா விடயங்களும் இந் நிலையியற் கட்டளைகளை விரிவாகச் செயற்படுத்தல் தொடர்பான எல்லாப் பிரச்சினைகளும் காலத்திற்குக் காலம் சபாநாயகர் பணிக்கின்ற முறைப்படி ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்.

(முற்றும்)

# எண்ணெய் விலை அதிகரிப்புக்கு தயாராகி வருகிறது அரசாங்கம்

## ஐ.தே. கட்சி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

உலக சந்தையில் எண்ணெயின் வலை அதிகரிப்பிற்கு அமைய விலை அதிகரிப்பை மக்கள் மீது சுமத்தப்போவதில்லை எனக் கூறிய அரசாங்கம், மீண்டும் எண்ணெய் விலையை அதிகரிப்பதற்குத் தயாராகி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் டொலரின் பெறுமதியைத் தக்க வைத்துக் கொள்ள முடியாமையே இதற்கான காரணமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்கத்தை அமைத்ததும் அமைச்சர் சுசில் பிறேம் ஜெயந்த என்ன சொன்னார்?

ஐக்கிய தேசியக் கட்சியினரும் தாமும் வேறுபட்டவர்கள் எனக் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் எண்ணெய் விலை அதிகரிப்பின் போது அதனை அதிகரிப்பு என்றார்.

இப்போது என்ன கூறுகின்றார்; மீண்டும் எண்ணெய் விலையை அதிகரிக்க வேண்டும் என்கிறார்.

இன்னமும் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்று 45 டொலருக்கு கொள்வனவு செய்யப்படவில்லை. இன்னமும் 37 ,38 டொலர்களுக்கு மசகு எண்ணெய் பீப்பாய் இங்கு கொள்வனவு செய்யப்படுகிறது.

எனினும்,இவர்களினால் டொலரின் பெறுமதியைக் கட்டுப்படுத்த முடியாததன் காரணமாக 86 ரூபாவுக்கு இருந்த டொலர்,16 ரூபாவால் அதிகரித்து 102 ரூபாவாகியுள்ளது. அது அரசின் தவறாகும் என்றும் குறிப்பிட்டார். (ந-8)

# தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் நடாத்தப்படும் சைவ சித்தாந்த பிரவேச, பாலபண்டித,பண்டிதர் தேர்வு நாளை வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 8ஆம் திகதி வரை வண். நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பரீட்சை அட்டவணை மற்றும் பிரவேப் பத்திரம் என்பன தேர்வுக்கு விண்ணப்பித்தோருக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவை கிடைக்காதோரை தேர்வுச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# சாவ.வைத்தியசாலையில் இராணுவத்தினர் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

மே தினத்தையொட்டி அரசாங்கத்தின் சகல துறைகளிலும் நடாத்தபபட்ட தேசிய சிரமதான நிகழ்வுகளுக்கு ஏற்ப 53ஆவது சேனையகத்தின் சேனாதிபதி மேஜர் ஜெனரல் டபிள்யூ.வீ.எதிரிசிங்கவின் மேற்பார்வையின் கீழ் கடந்த மாதம் 29 ஆம் திகதி காலை சாவகச்சேரி அரசாங்க மாவட்ட வைத்தியசாலையின் சுற்றுப்புறத்தை சுத்தம் செய்யும் நிகழ்வு நடைபெற்றது.

இது யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.டி.தென்னக்கோனின் ஆலோசனையுடனும் வழிகாட்டலின் கீழும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இராணுவ அதிகாரிகளும், சிப்பாய்களுமென மிக அதிகமானோர் இச் சிரமதானத்தில் கலந்துகொண்டனர்.

இவ் வைத்தியசாலையின் வெளிப் பிரதேசங்கள் மிகவும் மோசமான நிலையில் பற்றைகள் நிறைந்து காணப்பட்டன. அவற்றை சிறப்பான முறையில் சுத்தம் செய்யப்பட்டது. இன்றும் இவ் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்கள், வெளி நோயாளர்கள்,நிரந்தர ஊழியர்கள் உட்பட சுமார் 300 பேருக்கு உணவுடன் தேநீரும் 53ஆவது சேனையகத்தினால் வழங்கப்பட்டது.

இச் செயலுக்காக மாவட்ட வைத்தியசாலையின் பிரதான வைத்தியர் உடபட அவ் வைத்தியசாலையின் நிர்வாகத்தினர் உட்பட நோயாளர்களும் இச் சிரமதானத்திற்காக இராணுவததினருக்கு நன்றியைத் தெரிவித்ததுடன், இப்படிப்பட்ட வேலைத் திட்டத்தினால் மக்களுக்கிடையே ஒற்றுமை மேலோங்கும் என்றும் கூறினார். (ந)

# வனவிலங்குகளை பாதுகாக்க விஷேட நடவடிக்கைகள்

(கொழும்பு)

வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பற்றாக்குறை நிலவுவதாக வனவிலங்கியல் திணைக்களப் பணிப்பாளர் தயானந்த காரியவசம் தெரிவித்துள்ளார்.

வனவிலங்குகளையும் வனவளங்களையும் அழிப்பதைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் திடீர் சுற்றிவளைப்புக்கள் வெற்றியளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களையும் வனவிலங்குகள் வலயங்களையும் அடையாளமிடும் நடவடிக்கைகள் வரைபடங்களில் மட்டுமே இதுவரை இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், தரைமார்க்கமாக இவை அடையாளமிடப்படாததால் வலயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதனால் கொங்கிறீற் தூண்களை நாட்டி அடையாளமிடும் நடவடிக்கைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அத்துடன் ,ரயிலுடன் மோதிக் காட்டுயானைகள் உயிரிழப்பதால் மட்டக்களப்பு,திருகோணமலை செல்லும் ரயில்களில் வனவிலங்கியல் அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் திணைக்களப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துளளார். (ந-2)

# வலைப்பந்தாட்ட வீராங்கனைகள் இருவருக்கு தலா பத்தாயிரம் ரூபா!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறையைச் சேர்ந்த வலைப்பந்தாட்ட வீராங்கனைகள் இருவருக்கு அகில இலஙகை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் ஒரு தொகைப் பணம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட அலச்சனா அந்தோனிப் பிள்ளை,எஸ்.பபித்திரா ஆகிய இரு வலைப்பந்தாட்ட வீராங்கனைகளுககும் தலா பத்தாயிரம் ரூபா வீதம் அகில இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

இப் பணத்தினை நேற்று முன் தினம் காலை யாழ். மாவட்ட செயலகத்தின் விளையாட்டு அலுவலகத்தில் வைத்து மாவட்ட விளையாட்டு அதிகாரி ரொகான் ராஜசிங்கம் வழங்கினார்.

(ந-19)

## பாக். லாகூரில் சம்பவம்

# காஸ் சிலிண்டர் வெடித்ததில் 3 மாடிக் கட்டடம் நொருங்கியது

## 30 பேர் பலி; 45பேர் படுகாயம்



(லாகூர்)

பாகிஸ்தானில் காஸ் சிலிண்டர் வெடித்து கட்டடம் இடிந்து விழுந்ததில் 30பேர் பலியாகியுள்ளதுடன் 45பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

பாகிஸ்தானில் லாகூர் நகரில் 3 மாடிக் கட்டடம் ஒன்றில் சிலிண்டர்களில் காஸ் நிரப்பும் தொழில் நடந்துவந்தது. நள்ளிரவில் காஸ் நிரப்பியபோது திடீர் என்று சிலிண்டர் வெடித்தது.

இது வெடித்த சத்தம் நகரம் முழுவதும கேட்டது. இந்தச் சம்பவத்தில் 3 மாடிக் கட்டடம் முழுவதும் இடிந்து விழுந்தது. இதையடுத்து உள்ள 3 கட்டடங்களும் இடிந்து விழுந்தன.

3மாடிக் கட்டடம் விழுந்ததில், அதன் இரு தளங்களில் படுத்து உறங்கிய 30 பேர் உடல் நசுங்கிச் செத்தனர். 2ஆவது மாடியில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 பேரும் இந்த விபத்தில் பலியானார்கள். பல பெண்களும் குழந்தைகளும் இறந்தனர்.

கட்டடத்தின் தரைத்தளத்தில் ஒரு பகுதியில் ஐஸ்கிரீம் பாக்டரி இருந்தது. அங்கு வேலைசெய்த தொழிலாளர்கள் 10 பேர் வழக்கமாக கட்டடத்துக்கு வெளியேதான் படுத்துத் தூங்குவார்கள். முதல்நாள் இரவு பலத்த மழை பெய்ததால், அவர்கள் பாக்டரிக்குள் படுத்துத் தூங்கினர். கட்டடம் இடிந்து விழுந்ததில் அவர்களும் பலியானார்கள்.

கட்டடம் இடிந்தபோது, 75 பேர் அங்கு படுததுத் தூங்கியதாகக் கூறப்படுகிறது. அவர்களில் இறந்தவர்கள் போக எஞ்சியவர்கள் அனைவரும் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இறந்துபோனவர்களில் 18 பேரின் உடலகளைப் பொலிஸார் மீட்டெடுத்து சவக்கிடங்குக்கு அனுப்பிவைத்தனர். காயமடைந்தவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ற)

## சோமாலியாவில் குண்டுவெடிப்பு

### 10பேர் பலி; 26பேர் படுகாயம்

(மொகாடிஷு)

சோமாலியாவில் பிரதமர் உரையாற்றிய ஸ்டேடியத்தில் சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் 10 பேர் பலியாயினர். பிரதமர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

சோமாலியாவில் உள்நாட்டுக் குழப்பமும பஞ்சமும், வறுமையும தொடர்ந்துகொண்டிருக்கிறது. இதற்கிடையே தலைநகர் மொகாடிஷுவில் உள்ள கால்பந்தாட்ட மைதானத்தில் பிரதமர் அலிஜெடி நேற்று முன்தினம் உரையாற்றினார்.

மைதான அரங்கத்தின் மதில் சுவரையொட்டியுள்ள இடத்தில் சக்திவாய்ந்த வெடிகுண்டு வெடித்ததில் 10 பேர் பலியாயினர். இநதச் சம்பவத்தில் பிரதமர் மயிரிழையில் உயிர் தப்பினார். இச்சம்பவத்தில் 26பேர் படுகாயமடைந்தனர். இக் குண்டுவெடிப்பு குறித்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ற)

WORLD NEWS உலக தரிசனம்

## எந்நேரமும் குமுறும் நிலையில் அமெ.இல் 13 எரிமலைகள்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள 13 எரிமலைகள் வெடிக்கும் அபாயம் உள்ளதாக புவியியல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் 169 எரிமலைகளைப் பற்றிய தகவல்களைப் புவியியல் ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர்.

அலாஸ்கா, கலிபோர்னியா, வோஷிங்டன், ஓரிகான், ஹவாய், வையோமிங் ஆகிய பகுதிகளில் உள்ள 13 எரிமலைகள் சீற்றம் கொண்ட எரிமலைகளாக எச்சரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, வோஷிங்டனில் உள்ள செயின்ட் ஹெலன்ஸ் எரிமலையும், ஹவாயில் உள்ள கிலாய் எரிமலைகளும் அதிக ஆபத்து கொண்ட எரிமலைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

எனவே, இநத எரிமலைகளைச் சு[illegible]யுள்ள மக்களுக்கும், எரிமலைகளுக்கு மே[illegible] பறக்கும விமானங்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற)

## முடி ஏற்றுமதி; 300 கோடி வருமானம்

(புதுடில்லி)

இந்தியாவிலிருந்து தலைமுடி ஏற்றுமதி மூலம் ரூ.300 கோடி வருமானம் இந்தியாவுக்குக கிடைத்துள்ளது.

இந்தியாவில் இருந்து சீனா, ஹொங்கொங், இத்தாலி, அமெரிக்கா, துனிஷியா ஆகிய நாடுகளுக்கு தலைமுடி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இதன் மூலம் 2003-2004ஆம் ஆண்டுகளில் ரூ.300 கோடிக்கு மேல் வருமானம் கிடைத்தது. மேலும், முடியைப் ஏறறுமதி செய்வதற்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை. விருப்பம்போல் ஏற்றுமதி செய்யலாம்.

அதோடு, பிளாஸ்டிக் பொருட்கள் ஏற்றுமதியை ஊக்குவிக்க ஆசிய நாடுகளுகது ஒரு குழுவும், ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு ஒரு குழுவும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## டில்லி ரயிலில் தீ விபத்து

(புதுடில்லி)

புதுடில்லியில் இருந்து சென்ற எக்ஸ்பிரஸ ரயிலில் தீப்பிடித்தது. எனினும் அதில இருந்த 2000 பயணிகளும் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்கள்.

டில்லியில் இருந்து பீகார் மாநிலம் பாரானி செல்லும் வைஷாலி எக்ஸ்பிரஸ் ரயில் நேற்று முன்தினம் பிற்பகல் பீகார் மாநிலம் ஹாஜிபூருக்கும், முசாபூருக்கும் இடையே டால்டாபுர் தியாரியா என்ற கிராமம் அருகே சென்றுகொண்டு இருந்தது. ரயிலில் ஏறத்தாழ 2 ஆயிரம் பயணிகள் இருந்தனர்.

அப்போது ரயில் என்ஜினில் குபீரென்று தீப்பிடித்தது. தீ கொழுந்துவிட்டு எரிந்தது. உடனே டிரைவரும் உதவி டிரைவரும் ரயிலை பிரேக் போட்டு நிறுத்தினார்கள். பிறகு எனஜினை விட்டு இருவரும் கீழே குதித்து மற்ற பயணிகள் பெட்டிகளுக்கு தீ வராமல் தடுக்க என்ஜினைத் தனியாகத் துண்டித்தனர். இதனால் தீ மற்ற பெட்டிகளுக்குப் பரவாமல் தடுக்கப்பட்டது.

தீப்பிடித்தது பற்றி பாட்னாவுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அங்கிருந்து தீயணைப்பு வண்டிகள் வந்து தீயை அணைத்தன. இந்த விபத்தில் உயிர்ச்சேதம் எதுவும் இல்லை. 2 ஆயிரம் பயணிகளும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்கள் என்று கிழக்கு மத்திய ரயில்வே தலைமை மக்கள் தொடர்பு அதிகாரி ஏ.[illegible] சந்திரா தெரிவித்தார். (ற)

## நடைபாதைக் குழந்தைகளை திருடி விற்ற கும்பல் கைது

சென்னை நடைபாதையில் வசிக்கும் குழந்தைகளைத் திருடிச் சென்று வெளிநாடுகளுக்கு விற்பனை செய்துவந்த கும்பல் பொலிஸாரிடம் சிக்கியுள்ளது.

இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட குழந்தைகளை இக்கும்பல் கடத்தி விற்பனை செய்திருப்பதாகத் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நூருல்லா தம்பதியினர் சென்னை நடைபாதையில் வசிப்பவர்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு ஆட்டோவில் வந்த மர்ம [illegible]

[illegible] தொண்டு நிறுவனம்தான் இதற்குக் காரணம் என்பதைக கண்டறிந்துள்ளனர். அநாதைக் குழநதைகளைத் தத்தெடுத்து வளர்பபதாகக் கூறிக்கொண்டு வெளிநாட்டவர்களுக்கு அவர்களை விற்றுவந்த அத்தொண்டு நிறுவனத்தில் நேற்று முன்தினம் பொலிஸார் அதிரடிச் சோதனை நடாத்தினார்கள்.

நெதர்லாந்து, அவுஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்தோரிடம் இத் தொண்டு நிறுவனம் இக்குழந்தைகளைத் தலா 25ஆயிரம் ரூபா முதல் 50ஆயிரம் ரூபா வரை விற்பனை செயது வந்திருப்பதாகக் கூறப [illegible]

## அபுகிராப் சிறையில் கைதிகளை துன்புறுத்திய பெண் அதிகாரி



ஈராக் கைதிகளைத் துன்புறுத்திய இங்கிலாந்து பெண் இராணுவ அதிகாரி மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[illegible]

யுள்ளன.

நூருல்லா தம்பதியினர் சென்னை நடை பாதையில் வசிப்பவர்கள். சில ஆண்டுக ளுக்கு முன்பு ஆட்டோவில் வந்த மர்ம நபர்கள் இத் தம்பதியினரின் ஒன்றரை வயதுக குழந்தையைத் திருடிச் சென்றனர். இதேபோலச் சென்னையின் பல பகுதிகளிலும் நடைபாதை யில படுத்துறங்கிய ஏராளமான குழந்தைக்ள கடந்த சில ஆண்டுகளாக மாயமாகி வந்தனர்.

நடைபாதைக் குழந்தைகள் தொடர்ந்து காணாமல்போவது ப்ற்றிய புகார்களை விசாரித்த பொலிஸார் திருவேற்காட்டைச் சேர்ந்த ஒரு உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்தோரிடம் இத் தொண்டு நிறுவனம் இக்குழந்தைகளைத் தலா 25ஆயிரம் ருபா முதல் 50ஆயிரம் ருபா வரை விற்பனை செயது வந்திருப்பதாகக் கூறப படுகிறது. இத்தொண்டு நிறுவனத்துக்கு குழந்தைகளைக் கடத்திவரும் கும்பலைச் சேர்ந்த சபிதா, நவுஸ்ரீ என்ற இரு பெண்கள் உட்பட 5 பேரைப் பொலிஸார் கைது செய் துள்ளனர். பிச்சைக்காரியான சபிதா நடைபாதைக் குழந்தைகள்ளை நோட்டம் விட்டு கடததல் கும்ப லிடம் தகவல் தெரிவிப்பாள் என பொலிஸார் தெரிவித்தனர். (து)

## சிறைக்குள் விஷச்சாராயம் அருந்தி 3 கைதிகள் பலி

(புதுவை)

பாண்டிச்சேரி மத்திய சிறைக்குள்ளேயே வஷச்சாராயம் அருந்தி 3 தைிகள் உயிரிழந துள்ளனர்.

பாண்டிச்சேரியின் மையப் பகுதியில் பலத்த பாதுகாப்புடன் கூடிய மத்திய சிறை உளளது. இங்கு பல்வேறு திருட்டு வழக்கு ளில் கைதுசெய்யப்பட்ட பொட்டு பேரையன், பூரணி மற்றும் ஜெகன் ஆகியோர் அடைக்கப பட்டிருந்தனர்.

இவர்கள் மூவரும் நேற்று முன்தினம் மாலை குளிக்கவென வந்தபோது திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தனர்.

சிறையிலுள்ள மேலும் பல கைதிகள் வஷச் சாராயம் அருந்தியிருக்கலாமென அஞ்சப் படுகிறது.

எனவே மற்றக் கைதிகளுக்கும் சிறை யிலுள்ள மருத்துவ அறையில் பிரிசோதனை நடைபெற்றுச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

விஷச் சாராயத்தால 3 கைதிகள் சிறைக் குள் உயிரிழந்த சம்பவம் பாண்டிச்சேரியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (கு)

## சீதனம் வாங்கினால் அரசு வேலை இல்லை

சீதனம் வாங்கினால் அரசு வேலை இல்லை என்று புதிய விதியை உருவாக்க வேண்டுமென மத்திய, மாநில அரசுக்கு உச்ச நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது.

இது தொடர்பான பொதுநல வழக்கு ஒன்றை நேற்றுமுன்தினம் விசாரித்த தலைமை நீதிபதி லகோடி தலைமையிலான 3 பேர் கொண்ட நீதிபதிகள் சீதனக் கொடுமையைத் தடுக்க கடுமையான சட்டம் இருந்தும் கடந்த 43 ஆண்டு களாக அச்சட்டம் தீவிரமாக நடைமுறைபபடுத் தப்படாதது குறித்து வருத்தம் தெரிவித்தனர்.

எனவே, புதிதாக அரசுப் பணிகளில் சேரும் ஆண்கள் சீதனம் வாங்கியிருக்கிறார் களா, அல்லவா என்ற விபரத்தை அரசுக்குத் தரவேணடும் என்றும் நீதிபதிகள் கூறினர். ஏற் கனவே அரசுப் பணிகளில் உள்ளவர்களிடமிருந் தும இந்த விபரங்கள் திரட்டப்படவேண்டு மென்று வலியுறுத்தியுள்ள நதிபதிகள் சீதனம் வாங்கும் ஆண்களுக்கு அரசு வேலை கிடைக்காது என்ற நிலையை மத்திய, மாநில அரசுகள் உருவாக்கவேண்டுமென்றும் கூறி யுள்ளனர். (து)

ஈராக் கைதிகளைத் துன்புறுத்திய இங்கி லாந்து பெண் இராணுவ அதிகாரி மீது விசா ரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஈராக் அபுகிராப் சிறையில் கைதிகளை செக்ஸ் கொடுமைகள் செய்ததாக இங்கிலாநது இராணுவ பெண் அதிகாரி லிண்சே மீது பர பரப்புக் குற்றச்சாட்டு கூறப்பட்டிருக்கிறது.

இதுதொடர்பாக இங்கிலாந்து இராணுவ கோர்ட்டில் தற்போது விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த விசாரணைக்காக லிண் சேவை (நடுவில் இருப்பவர்) பாதுகாப்பு அதிகாரி கள் அழைத்துச் சென்ற காட்சியைப் படத்தில் காணலாம். (ற)



## தீவிரவாதிகள் மூவர் கைது

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் நட்சத்திர ஹோட்டல் மீது நடந்த தற்கொலைப்படைத் தாக்குதல் தொடர்பாக 3 தீவிரவாதிகளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் அல்-கெய்டா அமைப்புடன் தொடர்புடைய ஜெம்மா இஸ்லா மிய தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள்.

கடந்த 2003ஆம் ஆண்டு ஜகார்த்தாவில் உள்ள மரியாட் ஹோட்டல், 2002ஆம் ஆண்டு நடந்த பாலி இரவு கேளிக்கை விடுதி மீதான தாக்குதல் ஆகியவற்றுடன் ஜெம்மா இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்குத் தொடர் புள்ளதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், தாக்குதலில் தொடர்புடைய 3 தீவிரவாதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மத்திய சுலவேசி மாகாணத்தில் கைதுசெய் யப்பட்டனர். அவர்களிடமிருந்து நாட்டுத் துப் பாககிகள், குண்டுகள், வெடிபொருள்கள் ஆகி யவற்றைப் பறிமுதல் செய்ததாக பொலிஸ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹோட்டல் மீதான தாக்குதல் தொடர்பாக ஏற்கெனவே 5 பேர் கைதுசெய்யப்பட்டுள் ளனர். மேலும் இத்தாக்குதலுடன் தொடர் புடைய முக்கிய குற்றவாளிகள் தேடப்பட்டுவரு கின்றனர். (ற)

## நதி உடைப்பெடுப்பு; 100பேர் உயிரிழப்பு

எதியோப்பியாவில் நதியொன்று உடைப் பெடுத்ததினால் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் சிக்கி 100ற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

50 ஆயிரம் கால்நடைகள் உயிரிழந் துளளதாகவும் அறிவிக்கப்படுகின்றது. இவ் வெள் ளத்தினால் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் வீடுகளை இழந்துள்ளனர். பயிர்கள், சொத்து கள், வதிகள் என்பன பெரிதும் சேதமடைந்துள்ளன.

அடிஸ் அபாபாவியிலிருந்து 700 கிலோ மீற்றா தூரத்திலுள்ள செபல் என்ற நதி உடைப் பெடுத்ததினாலேயே இவ் அனர்த்தம் ஏற்பட் டுள்ளன. (ற-9)

ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு - குறள்

வலம்புரி

# ஜனாதிபதியின் வார்த்தை நின்று பிடிக்குமா?

வார்த்தைகளில் இருக்கின்ற தெளிவுதான் மனித வாழ்க்கைக்கு அழகைக்கொடுக்கின்றது. இங்கு அழகு என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட செழுமையான வாழ்வியலைக் குறிக்கின்றது.

அரசியல்வாதிகளின் உயிர்நாடி நாக்கு. அது நாணயமானதாக உண்மையானதாக இருக்கவேண்டும். சுழலக்கூடிய அவயவம் அதுஎன்பதால் வார்த்தைகளையும் வாக்குறுதிகளையும் அடிக்கடி மாற்றி சுழட்டக்கூடாது.

வெளிவராத வார்த்தைக்கு மதிப்பு அதிகம். அதே வேளை வாயிலிருந்து வார்த்தை வெளிவந்தபோதும் அது வாழ்வியலில் நடைமுறையில் செயலுருப்பெற்றிருப்பின், அதுவெளிவந்த வார்த்தைக்குள்ள மதிப்பு மிகமிக அதிகம்.

சொல்வதைச் செய்வதுதான் வாழ்க்கையில் மனிதனுக்கு உயர்ந்த மகிமையை ஈட்டித்தரும். ஆனால் அரசியல் வாதிகள் எப்போதும் மக்களுக்கு ஒருமுகமும் நடைமுறைஅரசியலில் இன்னொருமுகமுமே காட்டிக்கொண்டு செயற்படுகின்றனர். இதனால் அவர்கள் அடிக்கடி கருத்தையும் இடத்தையும் மாற்றி வருகின்றமை அனைவரும் அறிந்ததே. ஆனால் அரசியலிலும் நேர்மையையும் புனிதத்தையும் கண்ணியத்தையும் கடைப்பிடிக்க கண்ணியத் தலைவர்கள் பலர் மாசு மறையற்று: வாழ்ந்தமை பெருமையுடன் நினைவுகொள்ளத்தக்க அம்சமாகும்.

பொதுக்கட்டமைப்பு பற்றி இப்பத்தியில் பல தடவை விலாவாரியாக அழுத்திக்குறிப்பிடப்பட்டது. இதில் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு தென்னிலங்கையின் அதிகார மட்டத்தவர்களுக்கும் இனவாதிகளுக்கும் அடியோடு விருப்பம் இருக்கவில்லை. இதனால் தென்னிலங் கைஅரசியல் களத்தில் பொதுக்கட்டமைப்பு விவகாரம் நணகளப்பட்டுக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் 'எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் அரசாங்கமே கவிழ்ந்துபோனலும்' விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை உருவாக்கியே தீருவேன். இதில் இம்மியளவும் விலகிச்செயற்பட மாட்டேன் என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா பகிரங்கமாக சபதம் எடுத்திருக்கிறார்.

நாட்டின் தலைவி-அரசின் தலைவி சிலதீர்மானங்களை அரசியல் கட்சி என்ற பேதங்களை மறந்து மக்கள், தேசம் என்ற நோக்கில் உறுதியாக எடுக்கவேண்டும். அந்தவகையில் ஆழிப்பேரலையில் அழிவடைந்த தேசத்தை மீளக்கட்டியெழுப்ப தமிழீழவிடுதலைப்புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பொன்றை நிறுவ வேண்டும் என்ற நோக்கில் ஜனாதிபதி எடுத்த பகிரங்க சபதம் வரவேற்கத்தக்க விடயம்.

மெச்சுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியவிடயம். ஆனால் எடுத்ததீர்மானம்,தீர்மானமாகவே இருக்குமா? அல்லது செயலுருப்பெறுமா? என்பதுதான் சிந்தனைக்குரிய விடயம். மூடிதிறந்த சோடாபோல ஜனாதிபதி சில நேரங்களில் பொங்கியெழுவதும் வார்த்தை ஜம்பம் அளிப்பதும் வாய்ச்சவால் புரிவதும் கடந்த காலங்களிலும் நடைபெற்றது.

பின்னர் ஆட்சி அதிகாரம் என்ற அங்குசத்தால் குத்தப்பட்டதும் சோடா நுரை அடங்குவதுபோல அவரும் புஸ் என அடங்கிவிடுவார். இதுவும் கடந்தகால அனுபவம் தான். இந்தவகையிலேயே ஜனாதிபதியின் பொதுக் கட்டமைப்பு உருவாக்கல் சபதமும் அமையுமோ என எண்ணத்தோன்றுகின்றது.

ஜனாதிபதி சந்திரிகாவின் அரசாங்கத்தில் பிரதானமான கூட்டுக்கட்சி ஒன்று ஜே.வி.பி.பொதுக்கட்டமைப்பை தாறுமாறாக விமர்சித்து அதனை பகிரங்கமாக எதிர்க்கும்கட்சிகளில் முதல்நிலை வகிப்பதும் ஜே.வி.பி. இந்நிலைமையில் பொதுக்கட்டமைப்பை உருவாக்க ஜனாதிபதி முனைவது அவர் ஆட்சியை இழக்க துணிந்து விட்டாரா? என்ற வினாவை எழுப்பி உள்ளது.

நிச்சயமாக ஜே.வி.பியை இழந்து ஜனாதிபதி பொதுக் கட்டமைப்பை உருவாக்க மாட்டார். அதாவது ஜே.வி.பி அவருக்கு முக்கியம் அல்ல. ஆனால், ஆட்சி முக்கியம். இதனால் ஆட்சிக்கு முண்டுகொடுக்கும் ஜே.வி.பி. அதி ஒம்பார்க்க முக்கியம் பெறுகிறது. இந்நிலைமையில் பொதுக்கட்டமைப்புக்காக ஜனாதிபதி ஜே.வி.பியை இழக்க மாட்டார் என்பது உறுதியான முடிவாகும். இந்த வகையில் ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பின் உருவாக்கம் குறித்து பண்டாரநாயக்க சர்வதேசமாநாட்டு மண்டபத்தில் அரசியல் பிரமுகர்கள், சர்வதேசதலைவர்கள் முன்னிலையில் ஆவேசம் பொங்கக்கூடிய வார்த்தைகளின் கனதி எத்தகையது என்பதை சில நாட்களின் கடப்பில் அறிந்து கொள்ள முடியும்.

# அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்ற கொலைக்கு ஜனாதிபதியும், ரட்ணசிறியுமே பொறுப்பேற்க வேண்டும்

## ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி, கஜேந்திரன் எம்.பி கூட்டறிக்கை

(அவுஸ்திரேலியா)

தமிழ் ஊடகவியலாளர் மாமனிதர் தர்மரட்ணம் சிவராம் கொழும்பில் வைத்து கடத்தப்பட்டு பின்னர் கொல்லப்பட்ட



சம்பவத்தினை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக தற்போது அவுஸ்திரேலிய நாட்டுக்கு விஜயம் செய்துள்ள தமிழத் தேசியக் கூட்டமைப்பின் வெளிவிவகார குழு உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களுமான ஜோசப் பரராஜசிங்கம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் அங்கிருந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அவாகளது அறிக்கையில் இருவரும் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ் மக்களின் மறுக்கப்பட்ட உரிமைகளுக்காக தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் நடைபெற்று வருகின்ற தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நியாயப்பாடுகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெளிப்படுத்துவதில் அயராது உழைத்தவர் சிவராம்.

தமிழ் மக்களுக்கு எதிராக சிங்களப் பேரினவாத அரசபடைகளால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களை தனது எழுத்துக்கள் ஊடாக தமிழ், ஆங்கில ஊடகங்கள் மூலம் வெளியுலகிற்கு அம்பலப்படுத்துவதில் முன்னின்று உழைத்தவருமாவார்.

இணைந்த வட-கிழக்கு தாயகத்திலேயே தமிழ் மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழமுடியும் என்று திடமாக நம்பியதுடன், அதன் ஒருமைப்பாட்டிற்காக உறுதியோடும் துணிவோடும் செயற்பட்டவர். இவரது கொலையின் மூலம் தமிழ்த் தேசியத்திற்கான குரலை அடக்கி நசுக்கிவிடலாம் என அரசு முயல்கின்றது.

இக கொலையானது ஜனநாயகத்திற்கும் பேச்சு சுதந்திரத்திற்கும் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகும். மாற்றுக் கருத்துக்கள்ஞ்க்கு பதிலளிக்கத் தெரியாத கருத்துக்களை கருத்துக்களால் வெல்ல முடியாத கோழைகளே இக்கொலையினைச் செய்துள்ளனர்.

இக் கொலையின் மூலம் மாமனிதர் சிவராம் போன்று தமிழ்த் தேசியத்திற்காக குரல் கொடுக்கும் ஊடகவியலாளர்களை அடக்கி ஒடுக்கி விடலாம் என்று நினைத்தால் அது அவாகளின் பலவீனத்தையே காட்டுகின்றது.



சிவராம் கொலை செய்யப்பட்ட பின்னர் அவரது உடல் பாராளுமன்றத்தின் உயர் பாதுகாப்பு வலயப பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டது. இது தமிழ்த் தேசியத்திற்காக குரல் கொடுக்கின்ற தமிழத் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும்.

இபபகுதி மிகவும் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியாகவிருந்தும் இப்பிரதேசத்தில் சடலம் போடப்பட்டுள்ளது என்றால் அரசினதும் அதனது புலனாய்வுத் துறையினரின் பூரண ஆதரவின்றி இக்கொலை இடம்பெற்றிருக்க முடியாது.

அந்த வகையில் இக்கொலையினை ஸ்ரீலங்கா இராணுவ புலனாய்வுத் துறையும் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான தேசவிரோத சக்திகளும் இணைந்தே மேற்கொண்டிருக்கின்றார்கள் என சந்தேகம் எழுகின்றது.

இந்த வகையில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் நடைபெற்ற இக்கொலைக்கு ஜனாதிபதியும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்பதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான கோழைத்தனமான கொலைகள் இடம்பெறுவதையும் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுடன், சம்பந்தப்பட்டவர்கள நீதிக்கு முன்னால் கொண்டு வரப்பட்டு தண்டிக்கப்படவும் வேண்டும்.

இதேவேளை,சிவராமின் மறைவால் துன்புறும் அவரது மனைவி,குழந்தைகள்,உறவினர்கள் ஆகியோருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரு-4)

# நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் 15 இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களில் நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பொற்பதிப் பகுதியில் உலக தரிசனம் நிறுவனம் நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ள அதேநேரம், மணற்காட்டுப் பகுதியில் பிரசாந்த 'பீரிஸ் என்ற தனியார் நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளார்.

மேற்குறிப்பிட்ட இடங்களில் வீடுகளை அமைப்பதற்குத் தேவையான பொருட்களைக்கொண்டு செல்லக்கூடிய வகையில் வீதிகள் புனரமைக்கும் வேலைகள் இந் நிறுவனங்களினாலும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ள நிலங்களை அளக்கும் வேலைகளை நிலஅளவைத் திணைக்களமும் உடனடியாக ஆரம்பிக்கவுள்ளன.

மேலும் இந்நிறுவனத்தினர் நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான வேலைத்திட்டங்களை இடையூறின்றி மேற்கொள்வதற்குத் தேவையான சகல வசதிகளும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களினால் செய்து கொடுக்கப்படவுள்ளன.

இவை தவிர பல நிறுவனங்கள் யாழ். மாவட்டத்தில் சுனாமியால் பதிக்கப்பட்ட இடங்களில் நிரந்த வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளன.

இவற்றினது வேலைத்திட்டங்களும் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரு-19)

# தமிழரை பயங்கரவாதியாக பார்க்கும் நிலை தற்போது தென்பகுதியில் உருவாகியுள்ளது

## ரவிராஜ் எம்.பி சபையில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஊடகவியல்லாளர் சிவராம் உட்பட தமிழர்களைப் பயங்கரவாதிகளாகப் பார்க்கும் நிலை தற்போது தென்னிலங்கையில் உருவாகியிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்ட



மைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னர் ஜே.வி.பியே இந்தக் கொள்கையைக் கொண்டிருந்தபோதும், தற்போது ஜாதிக ஹெல உறுமயவும் இந்தக் கொள்கையையே கொண்டிருகக்கின்றது.

ஜே.வி.பியினர் ஊடகவியலாளர் சிவராமை பயங்கரவாதி எனத் தெரிவித்ததன் பின்னரே அவர் படுகொலை செய்யப்பட்டு ஜனநாயகத்தின் வாசல் எனக் கூறப்படும் பாராளுமன்றத்தின் அருகில் அவரின் சடலம் வீசப்பட்டிருந்தது.

பயங்கரவாதத்தைக் கைவிட்டு ஜனநாயகத்துக்குத் திரும்பியுள்ளதாகக் கூறும் ஜே.வி.பி தற்போது அரச பயங்கரவாதத்தை மேற்கொண்டு வருகிறது.

மேலும் சந்தேகநபர் ஒருவரை 24 மணித்தியாலங்களுக்கு மேல் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படுவது மனித உரிமை மீறலாகும்.

இத்தகைய மனித உரிமைகளை மீறும் எந்தவொரு நடவடிக்கைக்கும் தமது கட்சி ஒருபோதும் ஒத்துழைக்காது. ஜனநாயகத்தை மதிக்கும் எந்தவொரு நாடும் இத்தகைய சட்டமொன்றினைக் கொண்டுவராது எனவும் ரவிராஜ் எம்.பி மேலும் குறிப்பிட்டார். (ரு-4)



## சாயி அருள் அமுதம்

'சத்யம' 'அஹிம்சை' என்ற இரு கண்கள் உங்கள் உள்ளுணர்வுக்கு உண்டு. உள்ளே யிருக்கும் ஆகாசத்தின் சூரிய சந்திரர்களான அவை உங்கள் இலக்கிற்கு உங்களை எடுத்துச் செல்லும். பேச்சில் எந்த வழியில் சத்தியத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென நீங்கள் அறிய வேண்டுமானால் 'கீதையைப் பாருங் கள்' 'அநுத் வேக கரம் வாக்யம' அதாவது மற்றவர்களுக்கு மனநோயையோ, துன்பத்தையோ கொடுக்காத பேச்சு என்று கூறப்பட்டுள்ளது. *நன்றி*

*நாளாந்த நற்சிந்தனை*

# வீதி விபத்துக்களை தடுப்பதற்குரிய இறுக்கமான நடவடிக்கை அமுலாகும்

## யாழ்.செயலக கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துள்ள வீதி விபத்துக்களை தடுப்பதற்கு போக்குவரத்து விதிகளை கடைப்பிடிப்பது தொடர்பாக இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் 2மணியளவில யாழ்.செயலகத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்ற விசேடகூட்டத்திலேயே இத்தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ் விசேடகூட்டத்தில் வடபகுதி பிரதிப்பொலிஸ்மா அதிபர் டன்பதானு, 51வது படைப்பிரிவின் இராணுவத்தளபதி பிரிகேடியர் பராக்கிரம பன்னிப்பிட்டிய, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர், தவிசாளர், சிற்றூர்தி சங்கத்தலைவர் மற்றும் வீதிவிபத்துக்களை தடுப்பதற்கு நடவடிக்கைஎடுக்கக்கூடிய சகல திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டார்கள்.

நேற்றைய கூட்டத்தில் முன் வைக்கப்பட்ட ஆலோசனைகள் வருமாறு, மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களையும் குறைந்த வயதில் வாகன அனுமதிப் பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்துபவர்களை பொலிஸார் கைதுசெய்து சட்டநடவடிக்கை எடுத்தல், மோட் டார்சைக்கிளில் செல்லும் சகலரும் தலைக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும், துவிச்சக்கரவண் டிகளில் சமாந்தரமாகச்செல்வது தடைசெய்தல், நகரப்பகுதியில் வாகனங்களின் வேகக்கட்டுப்பாட்டை 40கிலோமீற்றர் ஆகமட்டுப்படுத்தல் வேண்டும், பழையவாகனங்களை உபயோகிப்பது மட்டுப்படுத்தல், வாகன நடமாட்டம் கூடிய பகுதி யில் ஒலி பெருக்கிகளை பாவிப்பதற்கு தடைவிதித்தல், மோட்டார் சைக்கிளில் இசைஒலிகளை பூட்டு தலை தடைசெய்தல்,

பாதசாரிகள் வீதிகளைக்கடக்கும் இடங்களை தெளிவாக அடையாளப்படுத்தல், சிறந்த வழிமுறைகளுடன் ஒட்டாதவாக [illegible] தடைசெய்தல், பாடசாலைமாணவர்களுக்கு பொலிஸாரின் உதவியைபெற்று பாடசாலை அதிபர்கள் வீதி ஒழுங்குகள் [illegible]யான வகுப்புக்களைநடாத்துதல், வீதிப்போக்குவரத்திற்கு தடையாகஉள்ள வீதி ஓரக்கடைகளை அகற்றுதல்,

வீதிச்சைகை அடையாளங்களை மறைக்கும் விளம்பரப்பலகைகளை பொலிஸாரின் உதவியுடன் அகற்றுதல், யாழ்.போதனாவைத்திய சாலையில் வெளிநோயாளர் பிரிவில்வீதிவிபத்துக்களால் காயமுற்று வருபவர்களை அனுமதிப்பதற்கென தனியான பிரிவுஒன்றை உருவாக்குதல்,சாவகச்சேரி, பருத்தித்துறை, கோப்பாய், ஊர்காவற்றுறை, சங்கானை வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைப்பிரிவு உருவாக்கப்படல்வேண்டும், துவிச்சக்கரவண் டியில் சமாந்தரமாகச்செல்லும் மாணவர்களை பொலிஸார் கைது செய்தால் முதலில் ஆலோசனை வழங்கிபின்னர் எச்சரிக்கை செய்யப்பட்டு குறிப்பிட்ட பாடசாலை அதிபரிடம் தெரிவித்த பிற்பாடு சட் டப்படி நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படல் போன்ற ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளைவீதி விபத்துக்களை தடுப்பதற்கான நடைமுறைகளை ஒழுங்காக பேணிமேற்கொண்டு மக்கள் ஒத்துழைப்புவழங்க வேண்டுமெனவும் பாடசாலைமாண வர்கள் சட்டத்தை மதித்து வீதிஒழுங்கு விதிகளைக்கைப்பிடிக் கவேண்டும் என யாழ்.அரசஅதிபர் கே.கணேஷ் கேட்டுள்ளார்.

(ச19)

---

### மினிவான்....

ணையின்பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப் பட்டு பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொணடுள்ளனர். (ச-08,04)

---

### சிவராமின்....

தேவையென சிவராமின் புகைப்படங்களையும், பதாகைகளையும் கையில் ஏந்தியவாறு அவர்கள் கோஷம் எழுப்பினர். சிவராமின் படுகொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் சர்வ தேசசுயாதீன ஆணைக்குழுவொன்றை நியமிக்க வேண்டுமென அவர்கள் வலியுறுத்தினர்.

இக்கொலை தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதமொன்றை நடத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் சபாநாயகர் ஜே.எம்.லொக்குபண்டாரவிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கு அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண் டோபுள்ளே இணக்கம் தெரிவித்தார். இதனையடுத்து பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டவேளை சபாநாயகரின் அலுவலகத்தில் கூடியகட்சித் தலைவர்கள் விசேட விவாதமொன்றை நடத்துவதென முடிவுசெய்துள்ளனர். எதிர்வரும் வெள்ளிக்கிழமை இந்த விவாதத்தினை நடத்துவதென முடிவெடுக் கப்பட்டுள்ளது.

இதற்கான யோசனையினை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் சமர்ப்பித்தார். இதற்காக இவர் ஒன்பது காரணங்களை யோசனையில் உள்ளடக்கியுள்ளார்.(ச-4)

---

### மோட்டார் சைக்கிள் பதிவு இன்று

யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் புதியமோட்டார் சைக்கிள்களை பதிவுசெய்வதற்காக விண்ணப்பித்தவர்களை இன்று காலை 10.30மணிக்கு பரிசோதனைக்காக உரியவாகனத்துடன் யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் வி.பத்மநாதன் கேட்டுள்ளார். (ச-19)

---

### மின்சாரசபை....

மல் அரசாங்கம் செயற்படுமானால் தொடர்ந்தும் தொழிற்சங்கப் போராட்டங்களில் ஈடுபடவுள்ளதாக மின்சாரசபை கூட்டுத் தொழிற்சங்க செயலாளர் ரன்ஜன் ஜயலால் தெரிவித்தார். (ச-4)

---

### பொதுக்கட்ட...

அவசியத்தை வலியுறுத்தினார். அப்பேட்டியில் அவர் மேலும் கூறுகையில், உத்தேசிக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பானது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் புனரமைப்பு பணிகளுக்காக கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளை பயன்படுத்துவதற்கு உத்தரவாதப்படுத்தும் செயற்திட்டம்.

விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு நேரடியாக நிதி வழங்கப்படும் வகையில் இந்தப்பொதுக் கட்டமைப்பு நிறுவப்படாது என்பது தெளிவானது. இந்தக் கூட்டமைப்பின் மூலம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கு நேரடியாக நிதி வழங்க சந்தர்ப்பம் கிடைக்கும் அத்துடன் உதவிகள் தவறான வழியில் செல்லுமென்ற அச்சமில்லாது உதவிகளை வழங்குவதற்கு உரிய நாடுகளுக்கு இதன் மூலம் உத்தரவாதம் கிடைக்கும்.

விடுதலைப்புலிகள் போன்ற அமைப்பொன்றுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது எந்த வழிமுறையில் அதனைக்கையாள வேண்டும் அதாவது யுத்த வழிமுறையிலா? அல்லது அரசியல் வழிமுறையிலா? அதனைக் கையாளவேண்டும் என்ற அடிப்படை விடயத்தினை தீர்மானித்துக் கொளள வேண்டும்.

பலவருடங்களாக இலங்கை மக்கள் யுத்தத்தை அனுவிக்க நேர்ந்துள்ளதால் யுத்தத்தினை விட அரசியல் வழிமுறையில் நடாத்தப்படும் பேச்சுவார்த்தைகளுக்கு அதிக வரவேற்பு உள்ளமையை அனுசரணையாளர் என்ற வகையில் நாம் தெளிவாகக் காண்கிறோம். (இ4)

---

### முப்படைத்....

களப்புக்குச் சென்றனர்.

இதன்போது இவர்கள் கிழக்குமாகாண பாதுகாப்புப் படையதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதேவேளை முப்படைத்தளபதிகளினதும் மட்டக்களப்பு விஜயத்தையடுத்து அங்குபலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது. சோதனை நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டிருந்தது. (ச-4)

---

### தனங்கிளப்பில்...

பெற்றதா அல்லது தொழில்நுட்பப் பிரச்சினையா என்பது தொடர்பாக விசாரணைகள் நடைபெற்றுவருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

---

### எரிபொருட்களின்....

ளுக்கு வெவ்வேறு இடங்களில் வெவ்வேறுவிலைகள் இருந்தவந்தன. எனினும் நேற்று நள்ளிரவு முதல் நாடுமுழுவதும் ஒரே விலையே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பெற்றோல் லீற்றர் ஒன்று 74 ரூபாவாகவும், டீசல்லீற்றர் ஒன்று 46 ரூபாவாகவும், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்று 28ரூபா50சதமாகவும் விற்பனை செய்யப்படுமெனவும் அவர் மேலும்தெரிவித்தார். (ச-4)

---

### ஜெயந்தன் படையணியின்.....

போர்முறையில் எமது இயக்கம் ஈட்டிய பரிணாம வளர்ச்சியையும் உயர் வடிவவிரிவாக்கத்தையும் இது குறித்து நின்றது. இந்தப் படையணியை நான் உருவாக்கியதற்கு முக்கிய காரணம் இருக்கிறது. இரண்டாம் ஈழப்போர் அகோரமாக நடந்தகாலமது. சிங்களப்படைகளின் பல்வேறு படையணிகள் பல்வேறு இடங்களில் பல்வேறு களங்களைத் திறந்தன. எமது மண்ணை ஆக்கிரமிக்க முனைப்போடு செயற்பட்ட காலகட்டமது. இந்த நிலையில எதிரிப்படையணிகளின் வளர்ச்சிக்கேற்ப எம்மையும்மரபுப் படையணிகளாக வளர்த்துக் கொள்வது காலத்தின் கட்டாயம். அத்தோடு கெரில்லாப்பாணியிலான அதிரடித் தாக்குதல்களோடு நின்றுவிடாது, பாரிய கூட்டுப்படைத்தளங்களைத் தகர்த்தழித்தது: எமது போராட்டத்தை அடுத்தகட்டத்திற்கு நகர்த்த வேண்டிய நிர்ப்பந்தமும் எமக்கு எழுந்தது. இந்தச் சூழமைவில் தான் ஜெயந்தன் படையணியை நான் உருவாக்கினேன்.

கரும்புலி ஜெயந்தன் ஒரு சிறந்த மாவீரன். விடாமுயற்சி, துணிவு,தன்னம்பிக்கை, போர்த்திறன், எல்லாவற்றிற்கும் மேலாக தமிழீழ இலட்சியத்திற்காக தன்னுயிரை ஈகம்செய்யும் அலாதியான அர்ப்பணிப்பு, என எல்லாம் கலந்த ஒட்டுமொத்த உருவம்தான் இந்தக் கரும்புலிவீரன் . இந்தக்கரும்புலி வீரனது நினைவாகத்தான் இந்தப் படையணியை நான் உருவாக்கினேன். இந்த மாவீரனைப் போன்று, இப்படையணியும் போராளிகளும் தளபதிகளும் போர்க் கலையில்வல்லவர்கள். அபாரமான துணிச்சல் கொண்டவர்கள். இவர்களின் இந்த உயர்ந்த போர்ப் பண்புகளுக்கு எதிரி பயப்படுகின்றான்.

ஜெயந்தன் படையணி அது தோற்றம் பெற்றகாலத்தில் இருந்தே எதிரியின் நிலைகள் மீது ஓயாது தணியாதுஇடைவிடாது தாக்குதல்களைத் தொடுத்தது. எதிரியின் முன்னனணி பாதுகாப்பு நிலைகள், காவலரண்கள், இராணுவ வேலிகள் என அனைத்தையும் தொடர்ச்சியாக தாக்கியழித்து வெற்றிகண்டது. சிங்கள இராணுவத்தின் ரோந்து அணிகளை நிர்மூலம் ஆக்கியது. தரையுடன் நிற்காது அடர்ந்த காட்டிலும் ஜெயந்தன் படையணியின் தாக்குதல்கள் விரிந்தன. கெரில்லாப் பாணியிலான தாக்குதலில் இருந்து மரபுவழிச்சமர் வரை ஜெயந்தன் படையணி சிறப்பாகச் செயலாற்றியது. இந்தத் தாக்குதல்கள் எமது விடுதலை இயக்கத்திற்கு பெரும்வெற்றிகளை ஈட்டித்தந்தது. எதிரி இராணுவம் இந்ததாக்குதல்களால் என்றும் இல்லாத பேரழிவைச்சந்தித்தது. எதிரியின் படைபலத்தில் பாரிய சிதைவு ஏற்பட்டது. உயிரிழந்து ஊனமடைந்தவர்கள் ஒருபுறமிருக்க, மனமுடைந்து படையில் இருந்து விலகிஓடியவர்களின் தொகையும் பெருகியது.ஜெயந்தன் படையணியுடன் நேரடிமோதல்களைத் தவிர்த்துக் கொள்வதிலேயே சிங்களப்படைகள் சிரத்தை எடுத்தன. இதனை ஜெயந்தன் படையணி ஈட்டிய மகத்தான போர்ச்சாதனை எனலாம்.

ஜெயந்தன் படையணியின் போராற்றலையும் இலட்சிய உறுதியையும் கடந்த ஆண்டின் முற்பகுதியில் உலகமே தன் கண்ணால் நேரடியாகக் கண்டது. மட்டக்களப்பு மண்ணிலே எமது போராட்டத்திற்கு எதிராக பெரும் துரோகம் நிகழ்ந்தபோது ஜெயந்தன் படையணி காட்டிய வீரமும் வெளிப்படுத்திய கொள்கைப் பற்றும் என்றுமே பாராட்டுக்குரியவை சரியான நேரத்தில் , சரியான இடத்தில் தனித்து நின்று துல்லியமாகத் தாக்கி துரோகத்தை முறியடித்து, எமது மண்ணையும் எமதுமக்களையும் எமது போராளிகளையும் மீட்டெடுத்தது. எமது விடுதலைப் போராட்டத்தையும் பேரழிவில் இருந்து காத்து, புலிகள்இயக்கத்தின் பேராற்றலையும் இலட்சிய உறுதிப்பாட்டையும் உலகிற்கு பறைசாற்றியது.

கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளில் ஜெயந்தன் படையணி நிகழ்த்திய தாக்குதல்களும் புரிந்த சமர்களும் போரியல் வரலாற்றிற்கு பெருமை சேர்ப்பன. இதற்கு இந்தப் படையணியில் இருந்து களமாடி வீழ்ந்த வீரமறவர்கள் புரிந்த தியாகங்களும் நிகழ்த்திய சாதனைகளுமே அடிப்படையானவை . இந்த வீரமறவர்களின் நினைவுகளோடு அவர்களின் வழித்தடங்களில் விரைந்து செல்லும் ஜெயந்தன் படையணிதனது விடுதலைப் பாதையில் விரைந்து முன்னேறிச் செல்ல எனது வாழ்த்துக்கள். அத்தோடு படையணியின் பன்னிரெண்டாவது ஆண்டு நிகழ்வு சிறப்புறவும் எனது ஆசிகள் என தமிழீழ தேசியத்தலைவரின் வாழ்த்துச் செய்தியில் குறிப்படப்பட்டுள்ளது.

(ச)


**விற்பனையாளர் தேவை**

விநாயகர் காகிதாதிகள் விற்பனை நிலையத்திற்கு ஆண்/பெண் விற்பனையாளர் தேவை 156/1 1-ம்குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் (வேம்படி பாடசாலைமுன்)

**தவற விடப்பட்டுள்ளது**

தில்லையம்பலம் கோபாலசாமி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (501981478V) யாழ்ப்பாணத்திற்கும் புங்குடுதீவுக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து புங்குடுதீவு-நயினாதீவு ப.நோ.கூ. சங்கதலைமைக்காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**மே 7 முதல்**

பாடநூல் வெளியீட்டிலும் நாடளாவிய விற்பனை மேம்படுத்தலிலும் கொழும்பில் முன்னணி வகிக்கும் லங்கா புத்தகசாலை அனுசரணையுடன்

யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின்

**மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்**

அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற உள்நாட்டு வெளிநாட்டு (ஆங்கில, தமிழ்) பாடநூல்களும், அகராதிகள், கவிதைகள், சிறுகதைகள், சமய இலக்கியங்கள், மருத்துவ நூல்கள் மற்றும் பல

இடம் : யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்
காலம் : 2005 மே மாதம் 7 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை
நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை (புதியநேரம்)
(வார இறுதி நாட்களும், விடுமுறை நாட்களும் உட்பட)

சிறப்பு விலைக்கழிவு

தொடர்புகளுக்கு
தலைவர், வணிக மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்
(C-1354)











இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.